பக்கங்கள்: 12 + IV = பதினாறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 22 வெள்ளிக்கிழமை (04~06~2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:192

# வெளிநாட்டு நிதி உதவி 'அவுட்'!

# தடுமாறுகின்றது சந்திரிகா அரசு

## நெருங்குகிறது பொருளாதார நெருக்கடி

கொழும்பு,ஜூன்4

**சமாதான முயற்சிகளில் ஆக்கபூர்வமான முன்னேற்றம் இல்லாமல் சர்வதேச நிதியுதவிகள் இலங்கைக்கு வழங்கப்படமாட்டாது என்பதை உதவும் நாடுகளின் இணைத்தலைமைகள் தமது பிரஸல்ஸ் கூட்டத்தின முடிவில் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டன. சர்வதேச நிதி உதவிகள் 'அவுட்' என்பது உறுதியானதால் அரசுத் தலைமை இடிந்துபோயிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.**

**நெருங்கிவரும் மிகமோசமான பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் வழிவகை தெரியாமல் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு தடுமாறுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.**

உதவி வழங்கும் நாடுகள் எப்படியும் கணிசமான ஒரு தொகையை வழங்க முன்வரும் என எதிர்பார்த்த அரசுக்கு அப்படி உதவி வழங்குவதற்கு சமாதான முயற்சிகளையும் சேர்த்து அவை முடிச்சுப்போட்டிருப்பது பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆட்சிக்கு வருவதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அள்ளி வீசிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு நிதி இல்லை என்பது ஒரு புறமிருக்க, அரசின் அன்றாடப் பணிகளைக்கூட முன்னெடுக்கமுடியாத இக்கட்டும், பொருளாதார நெருக்குதலும் நெருங்கி வருவது அரசை பெரும் குழப்பத்திற்குள் ஆழ்த்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

"அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கவும் அரசின் நிர்வாக செலவீனங்களுக்கும் திறைசேரி கஜானாவில் பணம் இல்லை. இதனால், மத்திய வங்கியிடம் கையேந்தி நிற்கின்றது

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நடேசனின் பூதவுடல் நேற்று வதிரியில் தீயுடன் சங்கமம்

## இறுதி ஊர்வலத்தில் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்பு

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பில் சுட்டுக்கொல்லப்பட்ட மூத்த தமிழ் ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் பூதவுடல் நேற்றுப் பகல் 2.15 மணியளவில் வதிரி ஆலங்கட்டை மயானத்தில் அக்கினியுடன் சங்கமமானது.

பெரும் எண்ணிக்கையான மக்கள், வடக்கு - கிழக்கு , தெற்கு ஊடகவியலாளர் சூழ நிற்க, உறவினர்கள் கதறி அழ, நடேசனின் மகன் கிரிதரன் சிதைக்குத் தீ மூட்டினார். நேற்று முன்தினம் மாலை முதல் நெல்லியடியில் உள்ள அவரது தந்தையாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக நடேசனின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது. பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள், போராளிகள் எனப் பலர் பூதவுடலுக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

நேற்றுக்காலை 9 மணிமுதல் சமயக்கிரியைகள் இடம்பெற்றன. அதன் பின்னர் 10.45 மணியளவில் இறுதி ஊர்வலம் ஆரம்பமானது.

'பாண்ட்' இசை முழங்க பூதவுடல் தாங்கிய ஊர்தி அவரது தந்தையாரின் வீட்டில் இருந்து மெல்லமெல்ல அசைந்து சென்றது. வீதியின் இரு மருங்கிலும் கூடியிருந்த மக்கள் மலர் தூவி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுததியதைக் காணமுடிந்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சுகாதார சேவை ஊழியர்கள் அடுத்த வாரம் வேலைநிறுத்தம்

கொழும்பு,ஜூன்4

சுகாதார சேவைகள் கூட்டு தொழிற்சங்க சம்மேளனம் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் நாடுதழுவிய ரீதியில் வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளரின சுற்றறிக்கைக்கு ஏற்ப திறைசேரி போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று கூறியே இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தொழிற்சங்க சம்மேளனத்தின் துணை ஒருங்கிணைப்பாளர் சமன் ரத்தனப்பிரிய தெரிவித்துள்ளார்.

வேலைநிறுத்தம் குறித்து சுகாதார சேவைகள் கூட்டு தொழிற்சங்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வாக்குச் சீட்டு அச்சிடும் பணி நேற்று ஆரம்பம்

கொழும்பு,ஜூன்4

எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தல்களுக்கு வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் நேற்று ஆரம்பமாகின.

இம்முறை 90 லட்சம் வாக்குச் சீட்டுக்கள் அச்சிட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இன்னும் இருவாரங்களுக்குள் அச்சிடும் பணிகள் முடிவடையும் எனவும் அரச அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்தார். (க)

# புலிகள்-இராணுவ அதிகாரிகள் மட்டக்களப்பில் சந்தித்துப் பேச்சு

மட்டக்களப்பு,ஜூன்4

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெற்று வருகின்ற படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பது தொடர்பாகப் படைத்தரப்பினரும், விடுதலைப் புலிகளும் நேற்று இரண்டாவது நாளாக வவுணதீவுப் பிரதேச செயலகக் கட்டடத்தில் சந்தித்துப் பேசினர்.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு அலுவலகப்பொறுப்பாளர் பிரடன் ரஸ்முசின் முன்னிலையில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

படைத்தரப்பில் 233 ஆவது படைப் பிரிவு கட்டளை அதிகாரி லெப்டினன்ட் கேணல் லக்ஸ்சிறி அமரதுங்க, உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் கீரகல ஆகியோர் உள்ளிட்ட குழுவினரும், புலிகள் தரப்பில் மட்டக்களப்பு நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.சேனாதிராஜா, பட்டிருப்பு அரசியல் துறைப்பொறுப்பாளர் செல்வா உள்ளிட்ட குழுவினரும் பேச்சுக்களில் பங்குபற்றினர்.

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இப்பேச்சுக்கள் மிகவும் சுமுகமாக இடம்பெற்றதாக மட்டக்களப்பு நகர அரசியல் துறைப்பொறுப்பாளர் சேனாதிராஜா தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பில் இருவர் காயம்!

கொழும்பு,ஜூன்4

மட்டக்களப்பு - அம்பலாந்துறைப் பிரதேசத்தில் நேற்றுக்காலை 8 மணியளவில் கைக்குண்டு ஒன்று வெடித்ததில் இருவர் காயமடைந்துள்ளனர்.

குப்பைக்குள் கிடந்த கைக்குண்டு ஒன்று திடீரென வெடித்ததாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது என்று கூறப்பட்டது. காயமடைந்த இருவரும தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க)



வீதியெங்கும் திரண்டு நின்று நடேசனுக்கு மக்கள் விடைகொடுத்த காட்சி...

# தளபதி பலகல்ல இம்மாதத்துடன் ஓய்வு; ராஜதந்திரப் பதவியைப் பெறுவதில் சிக்கல்

கொழும்பு,ஜூன்4

இராணுவத் தளபதி, முப்படைகள் மற்றும் பொலீஸ் ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரி ஆகிய பதவிகளில் இருந்த லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல இம்மாதத்தோடு ஓய்வு பெறுவார் என்பது உறுதியாகிவிட்டது.

எனினும், அதற்குப் பின்னர் அவருக்கு வெளிநாட்டுக்கான தூதுவர் போன்ற இராஜதந்திரப் பதவிகள் வழங்கப்படுவதில் நெருக்கடிகள் இருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவத் தளபதி என்ற முறையில் ஜெனரல் பலகல்லவின் மூன்றாவது பதவி நீடிப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி காலாவதியாகின்றது. அத்தோடு, ஜூன் 15ஆம் திகதி அவர் 59 வயதை எட்டுகின்றார்.

அதற்குப் பின்னர், அவரது பதவிக காலத்தை நீடிப்பதில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முடிவு செய்திருக்கின்றார் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

முப்படைகள் மற்றும் பொலீஸின் சிரேஷ்ட அதிகாரி பதவியை தற்போது ஜெனரல் பலகல்லவுக்கு அடுத்து படைத்தளபதிகளில் சிரேஷ்ட நிலையில் இருக்கும் கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரிக்கு வழங்க ஜனாதிபதி முடிவு செய்திருக்கின்றார் என்றும் சிறில் ஹேரத் கூறினார்.

ஜனாதிபதிக்கு மிக நெருக்கமான

(12 ஆம் பக்கம் பார்க்க)





மறைந்த ஊடகவியலாளர் ஜி.நடேசனின் புகழுடலுக்கு அவரது மனைவி வாய்க்கரிசி இட்டு அஞ்சலி செலுத்திய உருக்கமான காட்சியை முதலாவது படத்திலும், அவரது இறுதி ஊர்வலம் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் நகர்ந்து செல்வதை இரண்டாவது படத்திலும், நடேசனின் சரீரம் வதிரி ஆலங்கட்டை மயானத்தில் தீயுடன் சங்கமமாவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர் சி.சுந்தரலிங்கம்)

# ஊடகவியலாளர் நடேசனின் படுகொலைக்கு நீதிகோரி மூவின செய்தியாளர் நாடாளுமன்றின் முன் ஆர்ப்பாட்டம்

## நடத்தவேண்டும் என்கிறார் சிவாஜிலிங்கம் எம்.பி.

வடமராட்சி,ஜூன்4

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலைக்கு நீதி கோரி தமிழ், சிங்கள, முஸ்லிம் செய்தியாளர்கள் நாடாளுமன்றம் முன்பாகப் போராட்டம் நடத்தவேண்டும்.

- இப்படிக் கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம்.

நெல்லியடியில் நடந்த ஊடகவியலாளர் நடேசனின் இறுதி அஞ்சலி வீர வணக்கக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் தமது அபிலாஷைகளை வடக்கும் - கிழக்கும் இணைந்ததாக வெளிப்படுத்த ஊடகவியலாளர்கள் உதவினார்கள். வடக்கும் - கிழக்கும் இணைந்த தாயகத்தில் கூட்டமைப்பு பெரு வெற்றியைப் பெற உதவிய ஊடகவியலாளர்களில் நடேசனும் ஒருவர். அவர் இன்று படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவரின் படுகொலைக்கான பொறுப்பை அரசுதான் ஏற்கவேண்டும் - என்றார்.

### பரா உரை

தமிழீழ நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா உரையாற்றுகையில் கூறியதாவது:-

நடேசன் ஆரம்பகாலத்தில் ஒரு கலைஞனாக செயற்பட்டுவந்ததுடன், மண்ணின் விடுதலைக்காகப் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதி தமிழ்த் தேசியத்தில் பற்றுக்கொண்டு செயற்பட்டு வந்தவர்.

அண்மைக்காலமாகப் பத்திரிகைத் துறையில் அவர் ஆற்றிய பங்கு மக்கள் மனதில் நின்று அகலாது. அவர் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற காலத்தில்கூட தமிழ்ச் சங்கத் தலைவராகச் செயற்பட்டதுடன், தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்றவராக - ஒரு முற்போக்காளராக - ஆரம்பகாலத்தில் இருந்தே செயற்பட்டு வந்தவர்.

ஆனால், இன்றைய சூழலில் பல நெருக்கடிகளை நடேசன் எதிர்கொண்டார்.

இவருடைய உயிருக்கு இதற்கு முன்னரும் குறிவைக்கப்பட்டது. இவருடைய வீட்டின் மீது கைக்குண்டு வீசினார்கள். ஆனாலும் நடேசன் அதனைக் கண்டு பயந்து போகவில்லை. தனது பேனா முனையால் தான்சார்ந்த சமூகத்தின் பிரச்சினைகளை வெளியுலகிற்கு வெளிக்காட்டிக்கொண்டிருந்தார்.

பேரினவாத அரசுகள் தமிழ் பேசும் மக்களுடைய உரிமைகளை - உடைமைகளை - அழித்ததுடன் இல்லாமல், அவர்களுடைய குரல்களாக ஒலித்துக்கொண்டிருக்கும் ஊடகவியலாளர்களை அழிப்பதன் மூலம் எமது போராட்டத்தின் எழுச்சியையும், வளர்ச்சியையும் அழித்துவிடலாம் என்று நினைக்கின்றன.

இதனடிப்படையில் தான், நிமலராஜனைப் படுகொலை செய்தார்கள். அப்போதும் இதே அரசுதான் ஆட்சிப் பீடத்தில் இருந்தது. அதே பாணியில் இன்று கிழக்கு மாகாணத்திலே தேசியத்தின் குரலாக ஒலித்துக் கொண்டிருந்த நடேசனைக் கொன்றொழித்துள்ளார்கள்.

இந்தக் கொலையை யார் செய்தார்கள் என்று மக்களுக்கு நன்கு தெரியும். இராணுவ காவலரண் அமைந்திருந்த பகுதிக்கு அண்மையிலே இக்கொலை நடைபெற்றுள்ளது. இதற்கான முழுப்பொறுப்பையும் இலங்கை அரசே ஏற்க வேண்டும்.

எமது அமைப்பைப் பொறுத்தவரையில் இக்கொலைக்கு எதிராக இன்னோர் எதிர்ப்புத் தாக்குதலை நடத்த முடியும். அதற்குரிய பலம் எம்மிடம் உண்டு. கிழக்கு மாகாணத்திலேயே தமிழ்த் தேசியத்தை அழிப்பதற்குப் பேரினவாதிகள் பல முயற்சிகளை மேற்கொண்டபோது அதனை எமது தலைவர் தந்திரோபாயமாக முறியடித்து அப்பிரதேசத்தைக் கைப்பற்றினார்.

இன்றுகூட கிழக்கு மாகாணத்திலே எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் தமிழ்த் தேசியம் வளர்ந்துகொண்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்திலே நிமலராஜனைக் கொலை செய்தபோது எமது தமிழ்த் தேசியம் அழிந்துவிடவில்லை. அது மேலும் பெரு மூச்சாக வளர்ந்துள்ளது. அதேபோல கிழக்கிலும் தமிழ்த் தேசியம் வளர்கின்றது. எமது மக்கள் எழுச்சி கொண்டு நிற்கிறார்கள்.

பேரினவாத அரசும், அதன் அடிவருடிகளாக - கைக்கூலிகளாகச் செயற்படுவோரும் எமது மக்களை இனியும் அடிமைப்படுத்த - அழித்தொழிக்க - நினைத்தால் அதன் விளைவு பாரதூரமாகத்தான் இருக்கும்.

எமது கைகள் தற்போது கட்டப்பட்ட நிலையில் இருக்கின்றன. சமாதான கால கட்டத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதன் மூலம் சர்வதேச சமூகத்தின் முன்னால் பேரினவாதிகளின் முகத்திரை கிழிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல, எமது பக்கத்தில் தவறு நடந்துவிடக்கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்கின்றோம். அதனால்தான் எது நடந்தாலும் நாம் மௌனம் சாதிக்கவேண்டியுள்ளது.

இவ்வாறான கொலைகளின் மூலம் எமது தமிழ்த்தேசியத்தையோ எமது இலக்குகளையோ யாராலும் தடுத்து நிறுத்தமுடியாது. அதுமேலும் பலமடையும் எமது மக்களுடைய உரிமைகளை வென்றெடுக்க எமது பேராசிரியர்களும், ஊடகவியலாளர்களும் பல தியாகங்களைச் செய்துவருகின்றார்கள்.

### இளம்பரிதி உரை

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

சிங்களப் பேரினவாதிகளும், தமிழினத் துரோகிகளும் தமிழ்த் தேசியத்தை அழிக்க நினைக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய எந்த முயற்சியும் வரலாற்றில் வெற்றி பெற்றதும் இல்லை; பெறப்போவதுமில்லை.

வலுப்பெற்ற தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பதற்குப் பிரதேச வாதத்தை எமது தமிழீழத்திலே ஏற்படுத்திய போது அதனை அப்பகுதியைச் சேர்ந்த மக்களும், போராளிகளும் ஒன்று சேர்ந்து முறியடித்தார்கள்.

அந்த மக்களால் விரட்டப்பட்ட கருணாவைப் பாதுகாத்து வருவது யார்? சிங்களப் பேரினவாதிகளே.

நடேசனுடைய படுகொலைக்கு சிங்களப் பேரினவாதிகளே காரணம் ஏனெனில், தமிழ்த்தேசியப் பற்றை ஊட்டியதனால்தான் இவர் அழிக்கப்பட்டார்.

நீதிக்காகவும், நியாயத்திற்காகவும் உறுதியோடு குரல் கொடுத்து உழைத்த ஓர் உத்தமர் இன்று படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

யுத்தநிறுத்தக் காலப்பகுதிகளில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடக்கும் அத்தனை நடவடிக்கைகளுக்கும் இராணுவமே முழுப் பொறுப்பு. அந்தவகையில், இந்தப் படுகொலைக்கும் அவர்களே பொறுப்பேற்கவேண்டும்.

ஊடகவியலாளர் நடேசனின் இழப்பை தமிழ்த் தேசியத்தின் இழப்பாகவே நாங்கள் கருதுகிறோம் - என்றார்.

கிழக்கிலங்கை ஊடகவியலாளர் சங்க உபதலைவர் சண் தவராசா, வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தைச் சேர்ந்த ஆர்.தயாபரன், வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் து.சத்தியசீலன், 'உதயன் - சஞ்சீவி' பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன், வீரகேசரி பொதுமுகாமையாளர் எஸ்.கந்தசாமி -

மிதுவாங்கொடை ம.வி. அதிபர் அதாவுல்கான், யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே.தவச்செல்வம், திருமலை ஊடகவியலாளர் சங்கத் தலைவர் சற்சிவானந்தன், வன்னிச் செய்தியாளர் கனகரவி, தினக்குரல் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த ஐயா சச்சிதானந்தம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன், செ.கஜேந்திரன் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். (எ-3-5-70-173)

# நடேசன் கொலையாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதே ஊடகவியலாளர்களுக்கு அரசு செய்யக்கூடிய கௌரவம்

## இரங்கலுரையில் சுனந்த தேசப்பிரிய தெரிவிப்பு

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலையில் சம்பந்தப்பட்ட கொலையாளிகளைக் கைதுசெய்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது தான், அரசு ஊடகவியலாளர்களுக்கு அளிக்கும் கௌரவமாக அமையும்.

- இப்படிக் கூறினார் சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பின் பணிப்பாளர் சுனந்த தேசப்பிரிய.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய முன்றலில் நேற்று நடந்த நடேசனின் இறுதிக்கிரியையையொட்டிய வீரவணக்கக் கூட்டத்தில் இரங்கலுரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் இரா.துரைரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும கூறியதாவது:-

ஊடகவியலாளர் நடேசன் தான் சார்ந்த மக்களின் அவலங்களை - அவர்களின் மன உணர்வுகளை - தமது ஆக்கங்கள் மூலம் வெளிப்படுத்தினார்; எமது அமைப்பில் இணைந்து ஒன்றுபட்டுச்செயற்பட்டார்.

அவரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றப் பெரும் எண்ணிக்கையான ஊடகவியலாளர்கள் தெற்கிலிருந்து இங்கு வரவிருந்தனர். வார இறுதியான படியால் வாரப் பத்திரிகைகளைப் பூர்த்திசெய்யவேண்டிய நிலை இருந்ததால் அவர்களால் வரமுடியாமற்போய் விட்டது.

சிங்கள, தமிழ், முஸ்லிம், பௌத்தம், கிறிஸ்தவம், இந்து என மதத்தாலும் இனத்தாலும் ஊடகவியலாளர் வேறுபட்டாலும் சகலரும் ஒரே விதமான ஊடகப் பணியையே மேற்கொள்கின்றனர். ஊடகவியலாளர் இன,மத வேற்றுமைகளுக்கு அப்பால் ஒன்றுபட்டுச் செயற்படுகிறார்கள். மக்களுக்குச் செய்திகூறுவதுதான் அவர்கள் பணி.

ஆனால், ஊடகவியலாளர்கள் பல நெருக்கடிகளை எதிர்நோக்குகிறார்கள். அரசியல் கட்சிகளாலும், சில ஆயுதக் குழுக்களாலும் இந்த நெருக்கடி அவர்களுக்கு ஏற்படுகின்றது.

2000ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் முடிந்த கையோடு யாழ்ப்பாணத்தில் நிமலராஜன் கொலைசெய்யப்பட்டார். ஆனால், இன்றுவரை கொலையாளிகளை அரசு கண்டுபிடிக்கவில்லை.

அதேபோன்று 2004 இல் தேர்தல முடிந்த பின் கிழக்கில் நடேசன் கொல்லப்பட்டுள்ளார். இந்தக் கொலையைச் செய்த கொலையாளிகளைக் கைது செய்து அவர்களுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவே ஊடகவியலாளர்களுக்கு அரசு அளிக்கும் கௌரவமாக இருக்கும்.

இதேபோன்றுதான் தெற்கில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான ரிச்சர்ட் டி சொய்ஸா, ரோகண குமார ஆகியோரின் கொலையாளிகளையும் அரசு இன்னமும் கைதுசெய்யவில்லை.

நடேசனின் கொலைக்குக் காரணமானவர்களைக் கைதுசெய்யுமாறு இலங்கை அரசுக்கு சர்வதேச அமைப்புகள் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இந்தக் கட்டத்தில் அரசுக்கும் ஆயுதம் தாங்கிய குழுக்களுக்கும் வேண்டுகோள் ஒன்றை விடுக்க விரும்புகிறேன். ஊடகவியலாளர்கள் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் பணியாற்ற அனுமதிக்க வேண்டும். இதுவே உண்மைகள் வெளிவர உதவும் - என்றார் அவர். (எ-3-5-70-173)

'உதயன்' அனுசரணையுடன்

# ஊர்காவற்றுறையில் இன்று தடகளப்போட்டி; பரிசளிப்பு

தீவக கல்வி வலயத்தின் வருடாந்த தடகளப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிமுதல் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

'உதயன்' அனுசரணையுடன் நடைபெறும் இந்நிகழ்வுக்கு தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் பொ.வேணுகோபாலவாணிதாசன் தலைமை தாங்குகின்றார்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் வலைப்பந்தாட்டம், கரபந்தாட்டம், மென்பந்து கிரிக்கெட், உடற்பயிற்சி, பட்மின்ரன் மற்றும் சதுரங்கம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

தடகளப் போட்டிகளில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கும் பாடசாலைகளிற்கும் 'உதயன்' சுழல் கேடயங்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்படவுள்ளன. (எ-5)



ஊடகவியலாளர் நடேசனின் அஞ்சலிக் கூட்டத்தில் தமிழீழ நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா, யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தென் இலங்கை ஊடகவியலாளர் சுனந்ததேசப்பிரிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்துவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: வசந்தன்)

# ராஜீவ் வழக்கில் இந்தியாவுக்கு உதவ ஐரோப்பிய நாடுகள் சில நிபந்தனை

புதுடில்லி,ஜூன்4

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பான சாட்சியங்கள் கிடைக்கும் பட்சத்தில் அவற்றை ஒப்படைக்கத் தயார். அதேவேளையில் குற்றவாளிக்குத் தூக்குத்தண்டனை விதிக்க மாட்டோம் என்று இந்தியா உறுதி கூறவேண்டும் என்று பிரிட்டன் உள்ளிட்ட சில ஐரோப்பிய நாடுகள் நிபந்தனை விதித்துள்ளன.

ராஜீவ் கொலை வழக்கை விசாரித்து வந்த ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி 'பல்நோக்குக் கண்காணிப்பு அமைப்பு (எம்.டி.எம்.ஏ.)' அமைக்கப்பட்டது.

ஜெயின் ஆணைக்குழுவினர் கண்டுணர்ந்துள்ள உண்மைகளின் அடிப்படையில் தொடர்ந்து விசாரணை நடத்தும் வகையில் அமைப்புத் தனது பணியைத் தொடங்கியது.

1998 டிசெம்பர் 2ஆம் திகதி அமைக்கப்பட்ட இந்த அமைப்பின் பதவிக்காலம் கடந்த மே 31 இல் நீடிக்கப்பட்டது. இது மத்திய புலனாய்வுக் கழகம் (சி.பி.ஐ.) தலைமையில் இயங்குகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வங்கிகள் மூலம் எவ்வாறு பணம் அனுப்பப்படுகிறது என்ற விவரத்தை அறிந்துகொள்ள 23 நாடுகளுக்கு இந்த அமைப்பு கடிதம் எழுதியுள்ளது.

இதனடிப்படையில், தங்களுக்குக் கிடைக்கும் தகவல்களை அனுப்பத் தயாராக இருக்கும் சில நாடுகள்தான் மேலே குறிப்பிட்ட நிபந்தனையை விதித்துள்ளன.

இதுதொடர்பாக அரசுடன் விரைவில் விவாதிக்க உள்ளதாக மத்திய புலனாய்வுத்துறை (சி.பி.ஐ.) கூறியுள்ளது.

சாமியார் என்று கூறிக்கொள்ளும் சந்திரசாமி மற்றும் புலிகளுக்கு நிதியைத் திரட்டித் தரும் பணியில் உள்ள கே.பத்மனாபன் ஆகியோர் மூலம் 50 வங்கிகள் வழியாக விடுதலைப் புலிகளுக்கு பணப்பரிமாற்றம் நடந்திருப்பதாக சி.பி.ஐ. கண்டறிந்துள்ளது.

குறிப்பாக பத்மனாபனை தீவிரமாகக் கணகாணித்து வருகிறது மேற்படி அமைப்பு. ராஜீவ் கொலைக்கு முன்பும் அதன்பின்பும் புலிகள் அமைப்புக்குப் பணம் சென்ற வழிவகைகள் குறித்து அமைப்பு ஆராய்ந்து வருகிறது. (க)

# நேபாளப் பிரதமராக மீண்டும் ஷேர் பகதூர் தேவ்பா தேர்வு

காத்மண்டு,ஜூன்4

நேபாள நாட்டின் பிரதமராக ஷேர் பகதூர் தேவ்பா (வயது 62) மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேபாள மன்னர் ஞானேந்திரா இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாகப் பொதுத் தேர்தலைத் தள்ளிவைக்குமாறு மன்னருக்கு ஆலோசனை கூறியிருந்தார் தேவ்பா. இதனால் கோபமுற்ற மன்னர், பதவிக்குத் தகுதியற்றவராக அவரைக் கருதி 2002 ஒக்ரோபர் 4ஆம் திகதி பிரதமர் பதவியிலிருந்து நீக்கம் செய்தார்.

நாட்டில் அமைதியை ஏற்படுத்துமாறும், 2005 ஏப்ரலுக்குள் பொதுத் தேர்தலை நடத்துமாறும் மீண்டும் பிரதமராக ஆகியுள்ள தேவ்பாவுக்கு மன்னர் உத்தரவிட்டுள்ளார். பிரதமருக்குக் கூடுதல் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. பிரதமர் பதவிக்கு தேவ்பா மூன்றாவது முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். (க)

# அமெரிக்கப் படைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஈராக்கிய அரசுக்கு இல்லை!

வாஷிங்ரன்,ஜூன்4

ஈராக்கில் அதிகார மாற்றம் நிகழ்ந்த பின்னரும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினரின் நடவடிக்கைகளை ரத்துச் செய்யும் அதிகாரம் அங்கு அமையவுள்ள இடைக்கால அரசுக்கு இருக்காது என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார்.

அமையவுள்ள இடைக்கால அரசு முழுமையான அதிகாரங்களைக் கொண்டிருக்கும் என்று தெரிவித்துள்ள பவல், அமெரிக்க மற்றும் ஈராக்கியப் படைகள் வெவ்வேறான தலைமைகளின் கீழ் பணியாற்றும் என்றும் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் விடுத்த அறிக்கைக்கு முரண்பட்டதாக பவலின் கூற்று இருக்கிறது என்று தெரிவிக்கப்படுகின்றது. பிளயரின் அறிக்கையில் ஈராக்கிய இடைக்கால அரசிடம் கேட்ட பின்னரே தனிப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஈராக்கின் அதிகாரக் கையளிப்புத் தொடர்பாக அமெரிக்காவும் பிரிட்டனும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்துள்ள இரண்டாவது பிரேரணை மீதான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில், இந்த இரு முரண்பட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் புதிய பிரேரணையில், 2005ஆம் ஆண்டு இறுதியில் அரசில் நடைமுறைகள் முடிவுக்கு வரும் பட்சத்தில் கூட்டுப்படையினரின் ஆக்கிரமிப்பு ஈராக்கில் இருந்து விலக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஈராக்கிய இடைக்கால அரசுக்கு முழுமையாக அதிகாரம் - அதுவும் இராணுவ விவகாரங்களைக் கையாளக் கூடிய அதிகாரம் வேண்டும் என்று பிரான்ஸ் அதிபர் ஜக் ஷிராக் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈராக்கிய இடைக்கால அரசுக்கு எவ்வளவு அதிகாரம் வழங்கப்படப்போகின்றது என்பதை ஐ.நா. பிரேரணை தெளிவுபடுத்தவேண்டும் என்று தெரிவுசெய்யப்பட்டுள்ள ஈராக்கிய இடைக்கால அரசு வலியுறுத்தியுள்ளது.

வாஷிங்ரன் வந்துள்ள ஈராக்கிய வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹாஷர் சபாரி இந்த விடயத்தில் நிச்சயமாக அமெரிக்கா உதவும் என்று தான் எதிர்பார்ப்பதாகக் கூறினார். பிரேரணையை சரியான வடிவத்திற்குக் கொண்டுவர அது உதவும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (க)

உலக அரங்கில்

# அமெரிக்கப் படைத்தளம் மீது ஈராக்கில் ரொக்கெட் தாக்கு!

ஈராக்கில் அமெரிக்கப் படைத்தளம் ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் இரவு கடும் ரொக்கெட் தாக்குதல் நடத்தப் பட்டது. இத்தாக்குதலைத் தொடர்ந்து. படைத்தளம் பாரிய குண்டு வெடிப்புக்களால் அதிர்ந்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

ஈராக்கின் வடபகுதி நகரான கிர்குக்கில் உள்ள அமெரிக்கப் படைத்தளம் மீது உள்ளூர் நேரப்படி கடந்த புதன்கிழமை இரவு 10 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

முதல் வெடிச்சத்தத்தைத தொடர்ந்து சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு சில நிமிட நேர இடைவெளிகளில் குண்டு வெடிப்புகள் இடம்பெற்றதாக கிர்குக் வாசிகள் தெரிவித்தனர்.

ரொக்கெட் தாக்குதலில் படைத்தளத்தின் வெடிப்பொருள் கிடங்கு தீப்பற்றியதாகவும் -

அதனால் அங்கிருந்த வெடிபொருள்கள் வெடித்துச் சிதறின என்றும் - அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கின் எண்ணெய் வள நகரங்களில் முக்கிய இடம்வகிக்கும் கிர்குககில் இத்தகைய தாக்குதல் இடம்பெற்றிருப்பது, அமெரிக்காவுக்கு அதிக இடையூறை ஏற்படுத்தக்கூடும் என்று கூறப்படுகிறது. இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவலகள் உடனடியாக வெளியிடப்படவில்லை. (ஒ)



ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜெனிபர் ஹொக்கின்ஸ் (வயது 20) இந்த ஆண்டுக்கான பிரபஞ்ச அழகி (மீஸ் யுனிவேர்ஸ்) பட்டம் வென்றார். தென் அமெரிக்க நாடான ஈக்குவடோரின் தலைநகர் புயிட்டோவில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரபஞ்ச அழகிப் போட்டி இடம்பெற்றது. உலகெங்கிலும் இருந்து 80 நாடுகளின் அழகுராணிகள் இப்போட்டியில் கலந்துகொண்டனர்.

## தியன்மென் படுகொலைகள் நினைவுதினம்


சீனாவில் 1989ஆம் ஆண்டு இடம்பெற்ற தியன்மென் சதுக்கப் படுகொலைகளின் 15ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

சனாவில் அரசியல் மறுசீரமைப்பை வலியுறுத்தி தியன்மென் சதுக்கத்தில் திரண்டு போராடிய ஆயிரக்கணக்கான மாணவர்கள் மீது சீனப் பொலீஸாரும், இராணுவத்தினரும் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் உயிரிழந்தனர். (ஒ)

## எண்ணெய் விலை அதிகரிக்கும் அபாயம்

கடந்த சில நாள்களுக்கு முன்பு சவூதிஅரேபியாவில் அல்கெய்டா தீவிரவாதிகள் எண்ணெய் நிறுவனம் மீதும், குடியிருப்புகள் மீதும் தாக்குதல் நடத்தியதில் 22பேர் பலியானார்கள். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து சவூதி அரேபியாவில் பணியாற்றும் வெளிநாட்டவர்கள், எண்ணெய் நிறுவன ஊழியர்கள் சொந்த நாடு திரும்புகிறார்கள்.

இதனால், எண்ணெய் உற்பத்தியும் சவூதி அரேபியாவில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. எண்ணெய் விலையும் அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எண்ணெய் வள நாடுகளில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பெற்றோலிய எண்ணெய் பீப்பாய் ஒன்றுக்கு 4 ஆயிரம் ரூபாவரை சர்வதேச சந்தையில் அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது. (ஒ)



அமெரிக்காவின் சில மாகாணங்களில் சூறாவளிக் காற்றுடன் பலத்த மழை பெய்தது. அப்போது அதிபர் ஜோர்ஜ் புஷ் கொலோராடோவுக்கு செல்ல ராணுவ விமானத்தில் புறப்பட்டார். அதிபர் புஷ் வருகிறார் என்பதற்காக சூறாவளிக் காற்று பயந்துவிடுமா என்ன சுழன்று அடித்த சூறாவளிக் காற்றில் புஷ் பிடித்திருந்த குடை வளைந்து நெளிந்து உருத்தெரியாமல் போய்விட்டது. குடையுடன் சிறிதுநேரம் போராடிய புஷ் நனைந்துகொண்டே விமானத்துக்குள் ஏறினார்.

# ஜெயலலிதா மீதான வழக்கு ரத்து

சென்னை,ஜூன்4,

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீது சிறப்பு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட 'கிரனைட்' ஊழல் வழக்கை சி.பி.சி.ஐ.டி பொலீஸார் ரத்துச்செய்துள்ளனர்.

இவ்வழக்கு தி.மு.க ஆட்சியின் போது 1997 இல் பதிவு செய்யப்பட்டது. ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் அரசுக்குச் சொந்தமான 'கிரனைட்' குவாரிகள் விதிகளை மீறிக் குத்தகைக்கு விடப்பட்டதால் அரசுகடு பல கோடி ரூபா இழப்பு ஏற்பட்டதாக இவ்வழக்கில் புகார் கூறப்பட்டது.

இந்நிலையில், 2001ஆம் ஆண்டு மீண்டும் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி ஏற்பட்டது. தி.மு.க. ஆட்சியின்போது தொடரப்பட்ட 'பிளசன்ட் ஸ்டே' ஹோட்டல் வழக்கு, நிலககரி இறக்குமதி ஊழல் வழக்கு, ஸ்பிக பங்கு ஊழல் வழக்கு, 'டான்சி' நில பேர வழக்கு ஆகியவற்றில் இருந்து ஜெயலலிதா விடுதலை செய்யப்பட்டார்.

ஊழல் வழக்குகளை விசாரிக்கும சிறப்பு நீதிமன்ற நீதிபதி மதிவாணனுக்கு சி.பி.சி.ஐ.டி. பொலீஸார் சமீபத்தில் எழுதியுள்ள கடிதத்தில் 'கிரனைட்' ஊழல் வழக்கை முடித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

ஜெயலலிதா மீது வருமானத்தை விட அதிகமாக ரூபா 66 கோடி சொத்துச் சேர்க்கப்பட்டதாக தொடரப்பட்ட வழக்கு, உச்ச நீதிமன்றின் உத்தரவுப்படி சென்னை சிறப்பு நீதிமன்றத்திலிருந்து பெங்களூருக்கு மாற்றப்பட்டுள்ளது.

லண்டனில் ஹோட்டல் வாங்கிய வழக்கு, அமெரிக்காவிலிருந்து 3 லட்சம் டொலர் பெற்ற வழக்கு ஆகியவையும் ஜெயலலிதாவுக்கு எதிராக நிலுவையில் உள்ளன. (க)

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

மாசடைந்த கடல் உணவுகளை உட்கொள்வதால் உண்டாகும் ஈரலழற்சி நோயின் வருடாந்த பொருளாதாரத் தாக்கம் மட்டும் 7.2 பில்லியன் டொலர்கள் ஆகும்.

## சின்னஞ்சிறு விளம்பரங்கள

### விற்பனைக்கு

யாழ். நகர் வைத்தீஸ்வராச் சந்தியில் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி பிறைசூடி, 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.77-6155800. (32685)

பிறிமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் இன்று மாலை (04.06.2004) விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.:3529, 2867, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(32593)

3 ஸ்ரீ பரீனா கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 100, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் (கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டது). (32679)

### தேவை

கல்வி நிறுவனம் நடத்துவதற்கு திருநெல்வேலி, நல்லூர், கொக்குவில் முதலிய இடங்களை அண்மித்ததாக அளவான வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. தொடர்பு: சிவா, T.P.:077-6047770.

(32686)

### வாடகைக்கு

யாழ். வைத்தீஸ்வராச் சந்தியில் மாணவர்களுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு: திருமதி பிறைசூடி, 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(32700)

### தவறிவிட்டது

ஞானசம்பந்தர் வீதி, உரும்பிராயைச் சேர்ந்த அப்பையா ஜெயந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.802013876V) யாழ்ப்பாணத்திற்கும், உரும்பிராய்க்கும் இடையில செவ்வாய்க்கிழமை (01.06.2004) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியுடன் அல்லது T.P.:077-6321114 தொடர்புகொள்ளவும்.

(32709)

## வெளிவாரி முடிவுகள் ஜூன் 14 இல்

யாழ்ப்பாணம்,ஜூன்4

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பின் கலைமாணி பகுதிI இற்கான பரீட்சையின் மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகள் எதிர்வரும் 14ஆம் திகதி வெளியாகவுள்ளன என்று வெளிவாரிப் பட்டப்படிப்பின் உதவிப்பதிவாளர் எஸ்.கே.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைகள் 2002 ஆம் ஆண்டு மார்ச்மாதம் நடத்தப்பட்டன.அதன் பெறுபேறுகள் 2003ஆம் ஆண்டு ஜூன் மாதம் வெளியாகியிருந்தன.

எனினும் பரீட்சைப் பெறுபேறுகளில் தவறு நடந்ததால் அவை மீளாய்வு செய்யப்பட்டன. மீளாய்வு செய்யப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் தற்போது வெளியாகவுள்ளன.

(ஒ-ரி)

## ச.ச.நிலையங்களுக்கு உதவி நன்கொடை

வலி.தெற்கு,ஜூன்4

2003 ஆம் ஆண்டுக்குரிய உதவி நன்கொடைத் தொகைகளை வழங்குவதற்கு வசதியாக சுன்னாகம் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் உரிய படிவங்களைப் பூர்த்திசெய்து ஒப்படைக்குமாறு வலி. தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பல சனசமூக நிலையங்களுக்கு கடந்தவருடம் உதவி நன்கொடை வழங்குவதற்காக பிரதேச சபையால் உரிய படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டன என்றும் ஆனால், மேற்படி படிவங்கள் பூர்த்திசெய்யப்பட்டு பிரதேச சபை காரியாலயத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றும் -

இதனால், இந்த நன்கொடையை வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் - அவர் தெரிவித்தார்.

எனவே, நன்கொடைகளை வழங்குவதற்கு வசதியாக உரிய படிவங்களைப் பூர்த்திசெய்து விரைவில் ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்ட சனசமூக நிலையங்களைப் பிரதேச சபைச் செயலாளர் கேட்டுள்ளார்.

(ஒ-152)


யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன்

# இலவச ஆங்கில நேரடி வகுப்பு

## ஒரு மணி நேரத்தில் முழுமையாக ஆங்கிலத்தில் கதைக்கமுடியும்.

சந்தேகம் வேண்டாம். 2, 3 வயதில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கும் ஆங்கில குழந்தைகளுக்கு இலக்கணம் தெரியாது. ஆங்கிலத்தில் உள்ள 200, 300 சொற்களே தெரியும். அதைவிட அதிகமான சொற்கள் உங்களுக்குத் தெரியும். ஒரு மணி நேரத்தில் உங்களால் ஆங்கிலத்தில் கதைக்கமுடியும்.

இதுவரை இருபத்தையாயிரத்துக்கும் மேற்பட்டோர் பயிற்சிபெற்று நிரூபிக்கப்பட்ட பாடநெறி

இடம்: றிம்மர் மண்டபம் (TRIMMER HALL)
யாழ். மத்திய கல்லூரி அருகில், யாழ்ப்பாணம்.
காலம்: 05.06.2004, 06.06.2004 மற்றும் 07.06.2004
சனி, ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை

வகுப்புகள் (ஏதாவது ஒரு வகுப்பில் கலந்துகொள்ளலாம்)
காலை 9.00 முதல் 10.00, காலை 10.00 முதல் 11.00, மாலை 2.00 முதல் 3.00
மாலை 3.00 முதல் 4.00, மாலை 4.00 முதல் 5.00, மாலை 5.00 முதல் 6.00.

## அனுமதி இலவசம்

பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், கணனி, உயர்கல்வி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வீட்டுப்பெண்கள், இளைஞர், யுவதிகள், பட்டதாரிகள், அரச தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள்

அனைவரும் கலந்துகொள்ளலாம்.

கலந்துகொள்ளும் அனைவருக்கும்
கற்கைநெறி வழிகாட்டியும்
கலந்துகொண்டதற்கான சான்றிதழும் இலவசம்.

குறிப்பு: கடந்த காலங்களில் வகுப்புகளில் கலந்து சான்றிதழைப் பெறாதவர்கள் நேரடியாக வந்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம். எமது பாடநெறிகளுக்கான புத்தகங்கள் கிடைக்கப் பெறாதவர்களும் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

## Psalm Institute of Engineering and Technology

22- 1/4, Galle Road, Dehiwala.
Ph.: 071-4104100, 011-5559222.

(C-35394)(24-19-12-34)



அனைவருக்கும் 80% புலமைப்பரிசில்:

# COMPUTER EXPRESS
## Institute of Information Technology

இலங்கையில் தமிழ்மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச் சஞ்சிகையின் கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் புலமைப்பரிசில் திட்டம் - (3) 2004

எமது அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளுக்கும் 80% கட்டணக் குறைப்புச் செய்வதில் பெருமையடைகின்றோம்.

80% OFF

| பாடநெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம் (20%) |
|---|---|---|---|
| * Diploma in Computer Science | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| * Honours Diploma in Computer Science | - 4 மாதம் | 8,000 | 1,600 |
| * Advance Diploma in Computer Science | - 6 மாதம் | 10,000 | 2,000 |
| * Diploma in Webpage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| * Diploma in Graphics Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| * Diploma in Desk Top Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| * Diploma in Hardware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| * Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |

Individual Courses
✦ Fox Pro, Pascal
✦ C Language/C++
✦ Java
✦ Internet & E.Mail
✦ Microsoft Visual Basic 6.0
✦ Adobe PageMaker 6.5
✦ Microsoft Office 2000
✦ CorelDraw 10

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புகள் நடத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

For Kids
✪ Kids Program ✪ Advanced Kids Program

ஜூன் 20ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

COMPUTER EXPRESS
Institute of Information Technology.

வகுப்புகள் ஆரம்பம்:
Batch - 01- 05.06.2004
Batch - 02 - 13.06.2004
Batch - 03 - 20.06.2004

Maniam's Building
இல. 152/1, சிராம்பையடி வீதி, யாழ்ப்பாணம்.
(Off Stanley Rd.)
0777 222422 / 0777 278880

(C-35412)(26-14-21)

உதயன்

## தவறான போக்கு

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைப் பொறுப்பை வகிக்கும் நோர்வே, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகியவை இவ்வார முற்பகுதியில் பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் கூடி இலங்கைக்கு உதவியளிப்பது குறித்து ஆராய்ந்த பின்னர் வெளியிட்ட கருத்துகள் பல தரப்பினராலும் விமர்சிக்கப்பட்டு வருகின்றன.

அமைதித் தீர்வுக்கான முயற்சிகள் அர்த்த புஷ்டியான வகையில் ஆரம்பிக்கப்பட்டாலேயே நிதியுதவி என்ற தொனியில் அவை கருத்து வெளியிட்டிருப்பது பல தரப்புக்களினாலும் சிலாகித்து வரவேற்கப்பட்டிருக்கின்றது. அமைதி முயற்சிகளை விரைந்து ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு சர்வதேச சமூகம் கொடுத்த உயர்ந்த அழுத்தமாகவும் கூட இது விதந்துரைக்கப் பட்டிருக்கின்றது.

சம்பந்தப்பட்ட தரப்புகள் தமக்குள் பேசித் தீர்க்க வேண்டிய விடயங்களுக்குள் தாம் தலைபோடாமல் - அதை சம்பந்தப்பட்ட தரப்புகளிடமே விட்டுவிட்டு - வெளியில் நின்றுகொண்டு பொதுவான வகையில் - இந்த இணைத் தலைமைகள் கருத்துக்களை வெளியிட்டுள்ளன என்றும், தமது கருத்துக்களை வெளியிடுவதற்கான வாசகங்களில் தெளிவான வரையறைகளையும், கட்டுக் கோப்பையும், மதிநுட்பத்தையும், இராஜதந்திரத்தையும் அவை பேணி வெளிப்படுத்தியுள்ளன என்றும் சில அவதானிகள் கருதுகின்றனர்.

ஆனால், இந்தச் சமாதான முயற்சிகளில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகளுள் ஒன்றான ஈழத்தமிழர்கள் இந்தக் கருத்துகள் வெளிப்படுத்தப்பட்ட விதத்தை அப்படி நோக்கவில்லை என்பதுதான் யதார்த்தம்.

இலங்கைத் தீவில் அமைதித் தீர்வுக்கான சமாதான முயற்சிகள் இன்று தடைப்பட்டிருப்பதற்கு - தடங்கல்பட்டு நிற்பதற்கு - முக்கிய காரண, காரணிகள் எவையெவை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. அவை எவற்றையும் தெட்டத் தெளிவாகச் சுட்டிக்காட்டி அவற்றைத் திருத்துவதற்கு வழிசெய்யாமல் பூசிமெழுகி கருத்தை வெளியிட்டிருக்கின்றன இந்நாடுகள்.

விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கின்றார்கள் என்ற தமது பழைய, - கீறல்விழுந்த 'றெக்கோட்டை' - மீண்டும் தமது கருத்தில் விசேடமாக வெளியிட்ட இந்த இணைத் தலைமை நாடுகள், அரசுத் தரப்பில் பங்காளிகளாக இருக்கும் 'பேரினவாத சக்திகள்' தமது பேரினவாதப் போக்கின் உச்சியில் நின்றுகொண்டு போடும் தடையே அமைதி முயற்சிகள் இன்று நடுவழியில் இழுபடுவதற்கு முக்கிய காரணம் என்ற உண்மையை சாடைமாடையாகத் தன்னும் தமது கருத்தில் வெளிப்படுத்தவோ, அவற்றைத் திருத்தவோ முற்படவில்லை.

அமைதி முயற்சிகளில் தமிழர் தரப்புப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் கலந்துகொள்ளாத ஒரு கூட்டத்தில் (டோக்கியோ மாநாட்டில்) - புலிகளின் இணக்கமின்றி - தம்பாட்டில் தாமும் இலங்கை அரசுப் பிரதிநிதிகளும் எடுத்தமுடிவுகள் அடங்கிய பிரகடனத்தை - அமைதி முயற்சியில் சம்பந்தப்பட்ட தரப்புகள் என்ற வகையில் தமிழர் தரப்பு மீது உதவும் நாடுகள் அப்பட்டமாகத் திணிக்கமுயல்வதும் இந்தக் கருத்துக்களில் வெளிப்படுகின்றது.

அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முக்கிய அடிப்படை விடயமாக விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டுவது இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றிய விடயமாகும். வடக்கு - கிழக்குக்கு ஒரு நிர்வாகக் கட்டமைப்பு உடனடியாக அவசியம் என்பதால் அது குறித்து முதலில் பேசி முடிவெடுப்போம் என்கிறார்கள் புலிகள். அதற்கு இணங்க மறுக்கிறார் அரசுத் தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அதனால்தான், அமைதிப் பேச்சுகள் மீள ஆரம்பமாவது இழுபடுகின்றது.

"வடக்கு - கிழக்குக்கு செயற்றிறனுடன் கூடிய ஒரு நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படும் வரை அப்பகுதிகளுக்கு உதவும் நாடுகளின் நிதியுதவியுடனான அபிவிருத்தித் திட்டங்களை செயற்றிறனுடன் முன்னெடுப்பதற்கான ஒரு முறைமையைத் தரக்கூடிய நிறுவகத்தை ஏற்படுத்தும்படி சம்பந்தப்பட்ட தரப்புகளை ஊக்கப் படுத்துகிறோம்" - என்று தனது கருத்தை சளாப்பல் போக்கில் வெளியிட்டுள்ள இணைத் தலைமை நாடுகள், அவை தெட்டத் தெளிவான வார்த்தைகளால் - திட்டவட்டமான கருத்தாக - வெளிப்படுத்தியிருந்தால் அமைதி முயற்சிகள் மீள ஆரம்பிப்பதற்கு ஆக்கபூர்வமான உந்துதலைத் தருவதாக அது அமைந்திருக்கும்.

வடக்கு - கிழக்குக்கு ஒரு நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதை, நிதியுதவி அளிப்பதற்கான ஒரு முன்நிபந்தனையாக உதவும் நாடுகள் விதிப்பது கூட இது விடயத்தில் ஓர் ஆக்கபூர்வமான நகர்வாக இருக்கும். வழங்கப்படும் நிதி சரியான முறையில் - உரிய மக்களிடம் - சென்றடைவதை அது உறுதிப்படுத்தும்.

இரண்டு தசாப்தகால கொடூரப் போரினால் பாதிப்புற்ற மக்களுக்கு அவசர மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு உதவிகளை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். அதைவிடுத்து, இலங்கை முழுவதற்கும் வறுமைநிலை கருதிய அடிப்படையில் சர்வதேச உதவிகள் விஸ்தரிக்கப்படவேண்டும் என உதவும் நாடுகளின் இணைத் தலைமை கூறுவது முன்னுரிமை விடயங்களை புறக்கணிக்கும் போக்காகும். உதவும் நாடுகள் இவற்றைக் கவனத்தில் கொள்வது நல்லது.

# சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க உடனடியாக விசேட நடவடிக்கை

### யாழ்.செயலகக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜூன்4

குடாநாட்டில் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு விசேட நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதென்று யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான இக்கூட்டம் யாழ்.அரசஅதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இககூட்டத்தில் பொலீஸ் அதிகாரிகள், பிரதேச செயலர்கள், குற்றச் செயல்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்தும் சம்பந்தபபட்ட திணைக்களத் தலைவர்கள், சமயப் பெரியார்கள மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் வாகன விபத்துக்கள், ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள், கொலைகள், வல்லுறவுச் சம்பவங்கள், கூலிக்காகச் செய்யப்படும் குற்றங்கள், போதைப் பொருள் விற்பனை, கள்ளச்சாராயம் விற்றல், சிறுவர் துஷ்பிரயோகம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டன.

இதற்கமைய எடுக்கப்பபட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★ பொதுமக்களுக்கு குற்றச் செயல்களைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தப் பொலீஸார் மற்றும் கிராம சேவையாளர்கள் ஊடாகப் பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல்

★ கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக விழிப்புக் குழுக்களை உருவாக்குதல்

★ வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்க ஒரு மாதத்திற்குள் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவ்விண்ணப்பங்களின் தொகையைப் பொறுத்து ஒரு வாகனப் பரிசோதகரை 3மாத காலத்திற்கு இங்கு நிரந்தரமாக நியமித்து அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

★ வழியனுமதிப் பத்திரம் பொறாது பிரயாணிகள் சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகளுக்கு எதிர்வரும் 15ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கிப் பின்னர் சட்ட நடவடிக்கை எடுப்பது.

★ மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்பவர்கள் தலைக்கவசம் அணிவதை கட்டாயமாக்குவதுடன் 2பேருக்கு மேல் பிரயாணம் செய்யும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுத்தல்.

★ வேக வரையறை அறிவித்தல்கள் சகல முக்கிய வீதிகளிலும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் ஏற்படுத்துவது.

(ஒ-ரி)

# புலிகள் பற்றி இந்தியத் தலைவர்கள் ஒரு வார்த்தை தானும் பேசவில்லையாம்

### கதிர்காமர் அடித்துக் கூறுகிறார்

புதுடில்லி,ஜூன்4

புதுடில்லியில் இந்தியத் தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சுக்களின்போது அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றி ஒரு வார்த்தைதானும் பேசவில்லையென்று வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் குறித்து இந்தியத் தலைவர்கள் எதுவும் கூறினார்களாவென்று கேட்கப்பட்டதற்கு இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங்குடன் தாம் நடத்திய பேச்சுக்களின்போது ராஜீவ் காந்தியின் கொலை பற்றிய துரதிர்ஷ்டமான அந்த விடயம் பற்றி ஒரு வார்த்தைதானும் பேசப்படவில்லையென்று கதிர்காமர் நிருபர்களிடம் கூறினார்.

இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்குடன் திங்கட்கிழமை கதிர்காமர் சந்தித்து உரையாடினார். இந்தியப் பிரதமரும்கூட இந்த விடயம் பற்றி எதுவும் கூறவில்லையென்று கதிர்காமருடன் பேச்சுக்களில் கலந்துகொண்டிருந்த இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் மங்கள முனசிங்க நிருபர்களிடம் கூறினார். இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்ட சம்பவத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் சம்பந்தப்படுத்தப்பட்டு பிரசாரம் செய்யப்பட்டிருப்பதாலும் விடுதலைப் புலிகளின் தலைவரை இந்தியாவிடம் ஒப்படைக்கும்படி இந்தியா கோரக்கூடும் என்றும் - ஊகங்கள் நிலவியதாலும் இந்த விடயம் பற்றி இந்தியத் தலைவர்கள் கதிர்காமரோடு ஏதும் பேசி இருப்பார் என்றவகையில் நிருபர்கள் அவரிடம் கேள்விகள் கேட்டனர். ஆனால், அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றி ஒரு சொல்தானும் பேச்சுக்களின் போது உச்சரிக்கவில்லையென்று கூறியிருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு மாறிவருவதை இது காட்டுவதாகச் சில வட்டாரங்களில் கருதப்பட்டபோதிலும் விடுலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும், பொட்டம்மானையும் இந்தியாவிடம் ஒப்படைக்கும்படி கோருவதை இந்தியா கைவிட்டுவிட்டதா என்பது தெரியவில்லை. (ப)

# விடுதலைப் போரின் அதிக பங்கு மாணவ சமூகத்திடமே தங்கியுள்ளது!

### இதனை உணர்ந்து அணிதிரள அறைகூவல்

யாழ்ப்பாணம்,ஜூன்4

எமது மக்களின் விடுதலை, மாணவர் சமூகத்திடமே தங்கியுள்ளது என்பதைப் புரிந்துகொண்டு மாணவர் சமூகம் எமக்கான நாளில் அணிதிரள வேண்டும்.

நாளைமறுதினம் 6ஆம் திகதி தமிழீழ மாணவர் எழுச்சிநாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அதனையொட்டி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது விடுதலைப் போராட்டத்தில் ஓர் எழுச்சி வடிவமாக உருக்கொண்டது மாணவர் போராட்டம். மாணவர் சத்தியை அழித்தொழிப்பதன் மூலம் தமிழினத்தின் போராட்ட உத்வேகத்தைச் சிதைக்கலாம் எனப் பேரினவாத அரசுகள் பல்வேறு வழிகளிலும் முயற்சித்து வருகின்றன.

யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சஞ்சீவன் சுட்டுக்கொல்லபட்டது முதல் திவ்வியன் போன்ற பல்கலைக்கழக மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டமை வரையிலும், இந்த முயற்சிகளின் வடிவங்களே

பாடசாலைகளை இராணுவ முகாங்கள் ஆக்கியதும் இதற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்குள் இருந்து வந்த எமது தாயக விடுதலைப் போராட்டம் இன்று முக்கிய காலகட்டம் ஒன்றில் உள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிச் சுமார் இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் தமிழ்மக்கள் வாழ்வில் இயல்புநிலை ஏற்படவில்லை.

இன்றும்கூட பல பாடசாலைகள் இராணுவ ஆக்கிரமிப்பாளர்களின் முகாம்களாக மாணவ சமூகத்துக்கு ஆத்திரமூட்டும் அசிங்கம்மிக்க நரகலோகங்களாகவே காட்சி தருகின்றன.

ஆயிரம் ஆயிரம் மாணவர்கள் சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாது அகதிமுகாம்களில் இருந்து கல்வி பயிலுகின்றனர். நிலைமை இவ்வாறிருக்க, திட்டமிட்ட வகையில் அரசு பேச்சினை இழுத்தடித்து சமாதான காலத்தில் புத்திஜீவிகளையும் தேசப்பற்றாளர்களையும் கொன்றொழிப்பதன்மூலம் எமது விடுதலைப் போராட்டத்தினை அழித்துவிட பகற்கனவு காண்கின்றது.

சந்திரிகா அரசின் இந்தக் கபட நோக்கத்தினைப் புரிந்துகொண்டு எமது தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்தி தேச விடுதலையை வென்றெடுக்க மாணவ சமூகம் உறுதியோடு தொடர்ந்தும் செயற்படவேண்டும்.

எமது மக்களின் விடுதலைக்காக அன்று மாணவனாக இருந்த சிவகுமாரன் முதல் பல மாணவர்கள் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்துள்ளனர்.

எமது மக்களின் விடுதலை மாணவர் சமூகத்திடமே தங்கி இருக்கிறது என்ற யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு மாணவர் சமூகம் அணிதிரள வேண்டும். எனவே மாணவர்கள் அனைவரும் இந்த உறுதியுடன் மாணவர் எழுச்சி நாளான ஜூன் 6திகதியன்று அணிதிரண்டு மாணவர் எழுச்சியினை சிங்கள பேரினவாதத்திற்கும் சர்வதேசத்திற்கும் மீண்டும் தெரியப்படுத்துவோம் - என்றுள்ளது. (ஒ-6)

**நாளை**

வைகாசி 23
சனிக்கிழமை
(05.06.2004)
திதி : திருதியை
பின்னிரவு 3.04 வரை
நட்சத்திரம்: பூராடம்
பின்னிரவு 1.37 வரை
சுபநேரம்: 2.52-4.22
ராகுகாலம்: 8.52-10.22
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

தவறு என்பது தவறுதலாகச் செய்வது. தப்பு என்பது தெரிந்து செய்வது.

### 75தடவைகள் வெளிநாட்டுப் பயணம்

# முதலீட்டு சபைத் தலைவரால் நாட்டுக்குப் பெரும் நஷ்டம்

### அனுரா குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன்4

முதலீட்டுச்சபையில் ஊழல்களை ஒழித்துக்கட்டுவதில் முனைந்துநிற்கும் கைத்தொழில், முதலீடு மற்றும் உல்லாசப் பயணத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க, மேற்படி சபையின் தலைவர் அர்ஜுன மகேந்திரன் 75 தடவைகள் இரண்டு ஆண்டுகாலத்தில் வெளிநாடுகளுக்கு பிரயாணம் செய்துள்ளார் என்றும் அதன் மூலம் வரியிறுப்பாளர்களுக்குப் மூன்று கோடி அல்லது நாலுகோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தியிருக்கிறார் எனறும் கூறியுள்ளார். இச்சபையின் சில உயர் அதிகாரிகளுக்கு பெருந்தொகைப் பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு வழங்கப்பட்டமைக்கான நியாயமான காரணம் இல்லையென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சராகப் பதவி ஏற்றதன் பின்னர் இந்த அதிகாரிகள் எவரையும் தாம் இன்னும் சந்திக்கவில்லையென்றும் அவர் கூறினார்.

முதலீட்டுச் சபையின் உபகரணங்களையும் நிதிகளையும் அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்துள்ளனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இச்சபையின் நிர்வாகப் பகுதியின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வசந்தா பெரேரா கடந்த வாரம் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

இந்தச்சபையின் அதிகாரிகள் ஒரு முதலீட்டாளரின் விண்ணப்பப்பத்திரத்தை பட்டுவாடா செய்வதற்கும் கூட 30ஆயிரம் ரூபாய் வரை கோரியிருக்கிறார்கள் என்று அமைச்சர் சொன்னார். (ப)

யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்

**இல்ல மெய்வல்லுநர்**

**திறனாய்வு - மேற்பிரிவு 2004**

காலம்: நாளை (05-06-2004) சனிக்கிழமை பி.ப. 1.30மணி
இடம்: **வித்தியாலய மைதானம்**
தலைவர்: **திரு.ச.சத்தியவரதன் (அதிபர்)**
பிரதம விருந்தினர்: கௌரவ **ஆர்.தியாகலிங்கம்** *அவர்கள்* (செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம்)
சிறப்பு விருந்தினர்: உயர்திரு **பொ.வேணுகோபால்** *அவர்கள்* (வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகம்)
கௌரவ விருந்தினர்: **திரு. அருணன்** *அவர்கள்* (கோட்டப்பொறுப்பாளர், அரசியல்துறை)
பரிசில் வழங்கல்: **திருமதி கேமந்தராணி தியாகலிங்கம்** அவர்கள்

தங்கள் வரவு எங்களை மிக மகிழ்விக்கும்!

- பாடசாலைச் சமூகம்.

*நெடுந்தீவு - 4* (32692)(42)


நாளை பரீட்சை
இன்று
அனுமதிகளுக்கான
இறுதி நாள்
விரையுங்கள் !

**Mega**
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான
இலவச புலமைப்பரிசில் பரீட்சை
**5-6-2004**
**ASIAN COMPUTERS**
- 2 G, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
- பிரசன்னா கொம்ப்யூட்டர்ஸ் - K.K.S.வீதி,சுன்னாகம்.
- கொடிகாமம் ரோட், நெல்லியடி.


**பொன்விழா வாழ்த்து**

நேற்று (03.06.2004) வியாழக்கிழமை
தமது ஐம்பதாவது ஆண்டு
திருமண நிறைவு நாளைக் கொண்டாடிய



திரு.திருமதி
**துரைச்சாமி - தங்கேஸ்வரி**

*வானுயர்ந்த வீதியிலே வண்ண நிலா
விளக்கேற்ற வாழ்க்கை எனும் தேரினிலே
வண்ண முகில் மழை தூவ வற்றாத கங்கை
போல் வாழ்வெங்கும் வளம் காண
வாழ்த்துகின்றோம் இந்நாளில் வளமோடு
வாழ்கவென எம் நினைவுகளுடன் வாழ்த்துகின்றோம்
ஒற்றுமையும் அன்பும் ஒருங்கிணைந்த நட்பும்
ஒவ்வொரு நாளும் சேர்ந்திட - வானுயர்ந்த
நினைவு மெல்ல வார்த்தைகளால் சொல்ல
என்றும் வளமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றோம்
இன்பப் பெருநாளில் அன்பு நல் அறம் ஓங்க நாம்
அனைவரும் வாழ்த்துகின்றோம் அனைத்தும் பெற்று*
*– தேசமெல்லாம்*

*நலம் ஓங்க இதயத்தின் ஆழத்திலிருந்து
அன்புடன் வாழ்த்துகின்றோம்
வாழ்க்கையின் தேடலில் தடம் பதித்த எம்
வண்ண மலர்களுக்கு மங்கள வாழ்த்துக்கள்.*

திருநெல்வேலியை வதிவிடமாகக் கொண்ட எம் பாசமலர்கள் தமது 50ஆவது ஆண்டு திருமணநாளை (05-06-2004) சனிக்கிழமை ஜேர்மனியில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள்.

வாழ்த்துவோர்:
**சகோதரர்கள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தகவல்: **புகழானந்தம்,** பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு.

(32682)(26-14-19-21)

# 3 சனசமூக நிலையங்களுக்கு யாழ்.மாநகரசபை கௌரவம்

யாழ்ப்பாணம்,ஜுன்4

கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபையினால் தெரிவு செய்யப்பட்ட மூன்று சனசமூக நிலையங்களுக்கு கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையம் கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம் அரியாலை சனசமூக நிலையம் மூன்றாம் இடமாகவும் ஆகியவையே கௌரவம் பெற உள்ளன.

இந்தச் சனசமூக நிலையங்களுக்கான கேடயம் மற்றும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சிறப்புரையை யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா நிகழ்த்துவார்.

திறம்பட இயங்கிய சனசமூக நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்ட முறைபற்றிய விளக்கத்தை யாழ். மாநகரசபை உள்ளூராட்சி உதவியாளர் இ.அறிவரசன், யாழ். மாநகர சபை சனசமூக நிலைய உத்தியோகத்தர் து.சோமசுந்தரம் ஆகியோர் வழங்குவர். (4-7)

## கோப்பாயில் விபத்து; ஐவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜுன்4

கோப்பாய் இராசவீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இரண்டு மோட்டார் சைக்கிள்களுக்கிடையிலான விபத்தில் ஐவர் காயமடைந்தனர்.

நீர்வேலியைச் சேர்ந்தவர்களான எஸ்.சிவகுமார் (வயது 19), ரி.ஞானசந்திரன் (வயது 22), கோப்பாயைச் சேர்ந்த கு.சுதாகரன் (வயது 29), சுன்னாகத்தைச் சேர்ந்த ஆ.விஜயரூபன் (வயது 29), மிருசுவிலைச் சேர்ந்த க.சிவகரன் (வயது 22) ஆகிய ஐவருமே படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த ஐவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-9-7)

## சீருடைத்துணி விநியோகம்

நவாலி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கான இலவச சீருடைத துணிகள் அப்பகுதி கிராம சேவையாளரினால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் கிராம சேவையாளர் ரி.நித்தியானந்தன் கேட்டுள்ளார். (10-100)

*பாராட்டி வாழ்த்துகின்றோம்*

வடமராட்சி தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
யா/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரும்
செல்வச்சந்நிதி ஆலய சமூகசேவையாளரும் துணுக்காய்
வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளருமாகிய



உயர்திரு.
**கிருஷ்ணர் சிவப்பிரகாசம்**

அவர்கள் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக 19.05.2004 அன்று சத்தியப் பிரமாணம் எடுத்ததை முன்னிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சகோதரி **திருமதி தே.தங்கரத்தினம்,**
மருமக்கள் **திருமதி ரஜனி** (ஆசிரியை), **திரு தயானந்த்** (யாழ். பல்கலைக்கழக மாணவன்),
பேர்த்தி **சுயாந்தினி.**

(32676) (26-14-19-21)


உங்களது மின்சாரப் பிரச்சினையைத் தீர்க்க
**HONDA ஜெனரேட்டர்**

வீடுகள் , காரியாலயங்கள், ரெஸ்டூரண்டுகள், கடைகள், மண்டபங்கள், டிஸ்பென்சரிகள் மற்றும் ஏனைய தேவைகளுக்கும்.........



**Ep650, E650K, E1000k, EBK1200, EBK2000, KBK2000S, EBK2800, EBK2800**

**ஜெனரல் இக்குவிப்மென்ஸ் லிமிட்டெட்**
316, 400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-12.
போன்: 2345046, 2327264, 2343822-3, 2430799, பக்ஸ்: 2434637

TALENT


உ
சிவமயம்

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான தாரண வருடம் வைகாசி மாதம் 24 ஆம் நாள் (06.06.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 08.52 மணிமுதல் 10.22 மணி வரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்
**கருணாநிதி** (B.Sc.)
(ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி)
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
**தேவமகிழினி**
(யாழ். பல்கலைக்கழகம்)
அவர்களுக்கும்

இறையருள் துணைகொண்டு நல்லூர் சட்டநாதர் வீதி, இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து இடம்பெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

**திருமதி மாரிமுத்து**
இலகடி,
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

**திரு.திருமதி தேவராஜா** (G.S.)
54, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

குறிப்பு: இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(32688)(34-14-19)

*பாராட்டி வாழ்த்துகின்றோம்*

இன்று (04.06.2004) ஓய்வுபெற்றுச் செல்லும் இலங்கை வங்கி யாழ். இரண்டாம் கிளையின்
(கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்)



திருமதி
**இராசலட்சுமி தனபாலசிங்கம்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
உள்ளக் கதவை மெல்லத் திறந்து
எண்ணக் கருவை வண்ணம் கலந்து
இதயத் தேரிலுமை அழைத்து வந்து
சொல்லத் துடிக்கும் உறவுகள் நாம்
வங்கி வாழ்வின் வசந்த நாள்கள்
தங்கியின்பம் தந்தது போன்று
எல்லாச் சுகமும் இனிதே காண
நன்றே நலமாய் நின் குடும்பம்
என்றும் வாழ இறைவனிடம் - இன்று
ஒன்றாய் வேண்டி வணங்குகின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்
இலங்கை வங்கி
யாழ்.இரண்டாம் கிளை, யாழ்ப்பாணம்.

(சி-35368)(21-19-34-14)

# அரசுக்குள் இருந்தபடி யுத்தத்தைத் தூண்டும் சக்தியாக ஜே.வி.பி. விளங்குகிறது

**பிரபல அரசியல் விமர்சகரும் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் அரசறிவியல்துறை விரிவுரையாளருமான மு.திருநாவுக்கரசு ஆற்றிய உரையின் தொடர் இதுவாகும்.**

**கடந்த மாதம் 9ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற சமகால அரசியல் நிலைமை தொடர்பான கருத்தரங்கொன்றில் அவர் உரையாற்றினார். அந்த உரையின் நான்காவது பகுதி கடந்த 25ஆம் திகதி உதயனில் வெளியாகியது. இது ஐந்தாவது பகுதி.**



5

ஜே.வி.பியைப் பொறுத்தவரை இன்னொரு பரிமாணமுண்டு. யுத்தம் ஜே.வி.பியைத்தான் அதிகம் களப்பலியாக்கும் என்று சந்திரிகாவுக்குத் தெரியும். ஏனென்றால் விருப்புத்தேர்வு வாக்கு ஜே.வி.பிக்குத்தான் அதிகம் விழுந்துள்ளது. அவர்கள் தமது பலத்தைப் பேணுவதில் உறுதியாக உள்ளனர். இப்பொழுது 30 ஆயிரம் படைகளைச் சேர்ப்பதற்காக அரசும் களத்தில் இறங்கியிருக்கின்றது.

'யுத்தம் புலிகளைத் தோற்கடிக்குமா? வெல்லவைக்குமா? என்பதற்கு அப்பால் யுத்தம் ஜே.வி.பியை வளரவைத்துவிடக்கூடாது. வளரவைத்தால் சுதந்திரக் கட்சி அழிந்துவிடும். மீண்டும் எனவே யுத்தம் இல்லை.' இதுவே சந்திரிகாவின் எண்ணம்.

சந்திரிகாவின் அகராதியில்தான் யுத்தமில்லையேதவிர, சந்திரிகாவினுடைய பலவீனமான கதிரையை ஜே.வி.பி. ஆட்டி, அதட்டி யுத்தத்தின்பால் வீழ்த்தமுடியாதென நான் கற்பனை செய்யவரவில்லை.

அதிகாரத்திலிருக்கும் சந்திரிகாவைப் பொறுத்தவரையில் யுத்தம் தற்கொலைக்கு ஒப்பானது. இனிமேல் யுத்தம் தோன்றின் சுதந்திரக் கட்சிக்கும் ஐ.தே.கவுக்குமல்ல - ஜே.வி.பிக்கும் ஐ.தே.கவுக்கும் இடையில் என்று ரணிலுக்கும் நன்றாகத் தெரியும். எனவே, இந்தப் பின்னணியில் மீண்டும் சு.கவைத் தோற்கடிப்பதா இல்லையா என்று பார்த்தால் சந்திரிகா யுத்தத்தைத் தொடங்கக்கூடாது. ஆனால், சந்திரிகாவின் விருப்பத்தில் மட்டும் இது தங்கியிருக்குமொன்றல்ல.

சந்திரிகா எவ்வளவு கஷ்டப்பட்டும் மேற்குலகை திருப்திப்படுத்தவும் மேற்குலகின் பங்களிப்பைக் கோரவும் யுத்தத்துக்கு மாறாக ஒரு புதிய நிலைக்கு வருவார். அது சமாதானமாக அமையும். தேர்தல் காலகட்டங்களில் ஊடகங்களையும் அதிகம் பயன்படுத்தியது ஜே.வி.பி.தான் அதாவது அரச சாதனங்களை அதிகம் பயன்படுத்தியது ஜே.வி.பி.தான்.

அந்த வகையில் ஜே.வி.பி. இனியும் அரசின் பெயரால் உள்ள வளங்களைப் பயன்படுத்தவே செய்யும். ஜே.வி.பியைச் சில காலத்திற்கு யுத்தத்திலிருந்து ஒதுக்கிவைக்கமுடியும்.

ஆனால், ஜே.வி.பியினால் திரும்பவும் ஒரு கட்டத்தில் யுத்தத்தைத் தொடங்கமுடியும். எனவே, சந்திரிகா யுத்தத்திற்கு உடன்படாத போதும் ஜே.வி.பி. யுத்தத்தைத் தூண்டமுடியும்.

இன்னொரு வகையான அரசியல் இருக்கின்றது. ஜே.வி.பி. பிரசாரப் பலத்தையும் ஒரு காட்சிமயப்படுத்தும் அரசியலையும் செய்வதற்கு கால அவகாசம் வேண்டும் எனத் தீர்மானித்திருந்தால் அந்தத் தீர்மானத்தை வைத்துக்கொண்டு அதற்கு யுத்தமேகம் பற்றிய அரசியல் பிரசாரத்தையும் செய்துகொண்டு யுத்தம் இல்லாமல் செய்யலாம். அப்படியொரு தந்திரத்தை யோசிக்கமுடிந்தால் சமாதானத்தை சென்று அடையமுடியும்.

யுத்தம் பற்றிக் கதைத்துக் கதைத்து ஒரு கட்டத்தில் ஜே.வி.பி. யுத்தத்திற்கு வரலாம்.

ஆகவே, அடுத்து யுத்தத்தைத் தூண்டக்கூடிய இலங்கையின் முதலாவது சக்தி விடுதலைப் புலிகளுமல்ல; சந்திரிகா அரசும் அல்ல; ஐக்கிய தேசிய கட்சியும் அல்ல. அது ஜே.வி.பி.தான்.

இதுதான் இலங்கையின் வரலாற்றில் எவரும் எதிர்பார்த்திருக்காத ஒரு புதிய கட்டம். இவற்றில் சில விடயங்களை நான் எதிர்வுகூறுவதற்கு இன்னும் சில காலங்கள் பொறுத்திருக்க வேண்டியுள்ளது.

ஆனால், அரசின் பொதுக் கருத்தை அடையாளம் காணுகின்ற வகையில் இதுவரை பெருமளவு எம்முடைய கருத்தோட்டத்தில் அதிகம் பிழையில்லை என எனக்குத் தோன்றுகின்றது. ஆனால், இதை நான் இன்னும் செம்மைப்படுத்தச் சில காலம் பொறுத்திருக்க வேண்டியுள்ளது.

**புலிகளின் சரியான போக்கு**

அடுத்து, விடுதலைப் புலிகளின் அரசியலிலும் ஒரு புதிய கட்டம் தோன்றியுள்ளது. அவர்கள் இப்பொழுது தேர்தல் மூலமாக அரசியல் பலத்தைப் பிரயோகிப்பது என்ற கட்டத்திற்கு வந்திருக்கின்றார்கள். அது மிகவும் சரியானது.

நாடாளுமன்றத்தில் காணப்படுகின்ற சக்தி சமநிலைகளைக் குழப்ப தமிழ் மக்களின் வாக்குப்பலமும், ஆசனங்களும் அவசியம். புலிகள் ஒரு கால கட்டத்தில் அதிலிருந்து விலகி நின்றார்கள். புலிகள் நேரடியான இராணுவ ரீதியான போராட்டத்தின் மூலம் இராணுவத்தைத் தோற்கடிப்பதிலேயே அதிக முனைப்பாக இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் இதனையும் பயன்படுத்துவதென்று முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இதுவும் இலங்கை அரசியலில் ஒரு புதிய கட்டம். இது அதிகம் கைகொடுக்கும்.

விடுதலைப் புலிகள் தங்களது இராணுவப் பலத்திலிருந்து சிறிதும் இறங்காமல் ஓர் அரசியல் பலத்தை வளர்ப்பது தவறில்லை. நாடாளுமன்றத்தில் ஓர் அரசியல் பலத்தை அவர்கள் இப்பொழுது தோற்றுவித்திருக்கின்றார்கள். அது நாடாளுமன்றத்தை தங்களுக்குத் தேவையான வகையில் கையாள அவர்களுக்கு உதவும்.

## அரசியல் ஆய்வாளர் திருநாவுக்கரசுவின் உரை

இந்த இடங்களுக்கு அவர்கள் போகாமல் விட்டிருந்தால் நாடாளுமன்றத்தை இவர்கள் கையாள முடியாமற்போயிருக்கும் பலவேளைகளில் பல இழப்புகளைத் தவிர்ப்பதற்கு இது உதவவும் கூடும்.

**தொகுப்பு : கிருஷ்ணா**

இந்த முறை பேச்சு சம்பந்தமான காலங்களில் ஐ.தே.க. நேரடியாக எதிர்ப்பைத் தெரிவித்து வந்திருக்கின்றது. யதார்த்தத்தின்படி அவர்கள் பேச்சை ஆதரிக்கவேண்டும். அதைவிட சர்வதேச எஜமானர்களுக்கு சந்திரிகாவோ, ரணிலோ என்பதல்ல முக்கியம். போராடும் அமைப்புத்தான் முக்கியம். யாரிருந்தாலும் அவர்களுக்குப் பிரச்சினையில்லை. சந்திரிகா நிறைவேற்றுவாராக இருந்தால் ரணிலுக்கு அழுத்தம் கொடுப்பார்கள். எனவே மேற்குலக அரசியலில் ஈடுபாடு கொண்ட ஐ.தே.க. ஏற்கனவே சமாதான முயற்சிகளில் ஈடுபட்டது இதிலும் சர்வதேச சமூகத்தை மேவுவது சிக்கலாக்கும். இலங்கை வரலாற்றிலேயே வன்செயலற்ற தேர்தல் நடந்தகாலம் இதுவென்று பெரிதாகப் பொலீஸாரையும், இராணுவத்தினரையும், அரசாங்கத்தையும் பாராட்டுமளவுக்கு ஒருநிலை ஏற்பட்டது.

என்னைக் கேட்டால் அது ஒரு திகைப்புக்குரிய விடயம்தான் ஏன் என்றால் இலங்கை அரசியலில் எதிர்கட்சியால்தான் வன்முறை செய்ய முடியும்.

ஐ.தே.கவின் இம்முறை அடி தடிகளில் ஈடுபடாமல்விட்டதால்தான் சுமுகமான தேர்தல் நடந்ததே தவிர பொலீஸாரின் திறமை, இராணுவத்தின் திறமை, அரசின் திறமையெல்லாம் இதற்குக் காரணமில்லை. ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை தேர்தலில் அதிக அக்கறை காட்டவில்லை. அதனால், தேர்தலில் வன்முறை அதிகம் இடம்பெறவில்லை. பேச்சு என்பது புலிகளால் குழம்பாமல் ஜே.வி.பியாலோ, இலங்கை அரசினாலே குழம்பினால் உலகின் கோபத்துக்கு புலிகளோ, தமிழ்மக்களோ ஆளாக மாட்டார்கள்.

**சாதகமான நிலை தோன்றும்**

சுதந்திரக் கூட்டமைப்பு பதவியிலிருக்கும் ஒரு சூழலில் யுத்தத்திற்கான மேகங்கள் ஒரு கட்டத்துக்கு அப்பால் வெடித்தால் சர்வதேச ரீதியில் தமிழ் மக்களிற்கு ஒரு சாதகமான நிலை தோன்றும்.

எனவே, இந்த அரசின் பின்னணியில் நாங்கள் வெறுமனே பார்ப்பதற்கு அப்பால் ஒரு சர்வதேச உள்நாட்டரசியல் பரிணாமங்களிற்கு ஊடாகப் பார்க்கும்போது சமாதானம் சம்பந்தமான விடயங்களில் சாதாரண நிலையே உள்ளது.

இலங்கை வரலாற்றில் சமாதானத் தீர்வென்ற ஒன்று இலங்கை அகராதியில் இல்லவே இல்லை. ஒருபோதும் சாத்தியமே இல்லை. ஒரேயொரு விடயம்தான் சாத்தியம். சகஜநிலை.

இப்பொழுது ரணில் பதவிக்கு வந்து பேச்சுக்கு புலிகளும் ரணிலும் போயிருந்தால் 6 மாதத்தில் யுத்தத்தை நிச்சயம் எதிர்பார்த்திருக்கலாம். ஏனென்றால் 6 மாதத்திற்குள் ஒரு தீர்வு வரவேண்டும்.

ரணில் ஆட்சிக்கு வராத காரணத்தால் பேச்சு இன்னும் 1-2 வருடங்களுக்கு இழுபடலாம் யார் வந்தாலென்ன தீர்வென்ற ஒரு இறுதிக்கட்டம் அது யுத்தத்தின் இறுதிப்பொறி. அப்பொழுது அது யுத்தத்திலேயே முடியும்.

இப்பொழுது உள்ள கேள்வி, சகஜநிலையை எவ்வளவு காலத்திற்கு நீடிக்கலாம் என்பதே தவிர, சமாதானம் சாத்தியமானதா, இல்லையா என்பதல்ல.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் முதலாளித்துவப் பங்களிப்பில் சில கடினமான, முற்போக்கான பகுதிகள் உண்டு.

தேசிய சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு என்பது சுத்தமாக மாக்ஸியக் கோட்பாடு. தேசிய சுயநிர்ணய உரிமை, பிரிந்து செல்லும் சுயநிர்ணயக் கோட்பாடு என்பதைத் தொடக்கி வைத்தவர் மார்க்ஸ். அதை வளர்த்தெடுத்தவர் லெனின். அவருடையது முதலாளித்துவக் கோட்பாடல்ல. தேசங்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடுதான் முதலாளித்துவத்தினுடையது.

பிரிந்துசெல்லும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு என்பது சோக்ரஸ்டுகளுடையது. தேசிய சுயநிர்ணய உரிமை என்பது முற்றிலும் இடதுசாரிகளினால் முன்வைக்கப்பட்ட கருத்து.

ஒருமுறை றோகண விஜேவீர முக்கியமான நண்பர் ஒருவரிடம் 'லெனின் கொள்கையை ஏற்கிறேன். அவருடைய சுயநிர்ணய கோட்பாட்டைத் தவிர' என்று கூறினாராம்.

சோவியத் ஒன்றிய சமஷ்டி அமைப்பு இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த முடிவின் கீழ் அதிலிருந்த அனைத்து குடியரசுகளும் நலிந்துபோயின. சுயாதிபத்தியம் இருக்கமுடியவில்லை.

பேருக்கு சமஷ்டி இருந்தது. சோவியத் ஒன்றியத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு எடுக்கின்ற தீர்மானம் இறுதியானதாக இருந்தது. ஆகையால் அங்குள்ள ஒவ்வொரு மாநில அரசும் தீர்மானம் எடுக்க முடியாததாகப் போகின்றது.

**அமெரிக்கச் சட்டங்கள்**

அமெரிக்கச் சட்டங்களில் மாநிலங்களுக்கு பல சிறப்பான ஒழுங்குகள் இருக்கின்றன. அமெரிக்க மக்களுக்கு உலகை அரசு முறைகளால் மேலாதிக்கம் உடையவர்கள் தாங்கள் என்று எண்ணமுண்டு. இந்த எண்ணத்தை ஒவ்வோர் அமெரிக்கனும் கொண்டிருக்கிறான். இதனால், ஒவ்வொரு மாநிலத்தவனும் மத்திய அரசுக்கு விட்டுக்கொடுக்கத் தயாராகின்றான்.

இந்த விட்டுக்கொடுப்பின் பேரால் ஒவ்வொரு மாநில அரசும் நெருக்கடி வரும்போது மத்திய அரசுக்கு தன்னை விட்டுக்கொடுக்கின்றது. எனவே, நடைமுறையில் மாநிலங்கள் தேய்ந்துகொண்டே போகின்றன.

அமெரிக்க சமஷ்டி முறையை நாங்கள் மாதிரியாக எடுக்கமுடியுமா என்பதற்கு இரு கருத்துக்களைக் கூறலாம் ஒன்று அமெரிக்காவில் நீதிமன்றங்களின் அதிகாரம் எப்பொழுதும் கத்திக்குச சமனானது. அந்த நடைமுறை எங்களுக்கு வேண்டாம்.

ஆனால், அமெரிக்காவில் கூறப்பட்டுள்ள வரையறைகள் நல்லவை சமஷ்டி சம்பந்தமான விடயங்கள் நல்லவை.

அமெரிக்க யாப்பில் ஒரு பிரச்சினை இருக்கின்றது. அது இன அரசு சம்பந்தமான ஒரு தீர்வொன்றையும் கொண்டிருக்கின்றது. சிவப்பு இந்தியர் சம்பந்தமான சிறிய ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றதே தவிர சமஷ்டி அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் பொஸ்னியே செகசோவாதான் இனம் சம்பந்தப்பட்ட புதிய ஆட்சிமுறையைக் கொண்டிருக்கின்றது.

(வளரும்)

# சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்

மூன்று வயதிலேயே ஆழ்ந்த கருத்துச் செறிவும் பக்திச் சுவையும் கலந்த தேவாரப் பதிகங்களைப் பாடி தருப்பிரமபுரத்துத் தோணியப்பரின் திருவருளுக்குப் பாத்திரமான சம்பந்தப் பெருமானின் குருபூசைத் தினம் இன்றாகும்.

தேவாரத்திருமுறை மூலம் சைவம பரப்பி, அதனை வளர்க்கத் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, சமணர்களது எதிர்ப்புக்களைச் சமாளித்து அவர்களது கொட்டத்தையடக்கி சைவத்தை மேலோங்கச் செய்தவர் சம்பந்தர்.

**நாவாரப் பாடும் தேவாரம்**

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த இறைவனை நற்றமிழ் வளத்தால் சொற்றமிழ் பாடித் துதித்து நாவாரநாம் பாடத் தேவாரம்தந்த பெருமான் பாலறாவாயரான சம்பந்தரே.

திருஞானசம்பந்தருக்கு காழிவேந்தர், சீர்காழிச்செல்வர், ஆளுடைய பிள்ளையார்,பரசமயகோளரி என்று பல்வேறு திருநாமங்களுண்டு. பெரியபுராணத்திலே இவரது வரலாறு விரிவாக இருப்பதனால் பிள்ளை பாதி புராணம் பாதி என்றும் கூறுவதுண்டு. சேக்கிழார் பெருமான் இவரது வரலாற்றைக் கூறப்புகும் பொழுது.

*"வேதநெறி தழைத்தோங்க*
*மிகுசைவத்துறை விளங்க*
*பூதபரம்பரை பொலியப் புனிதவாய்*
*மலர்ந்தழுத*
*சீதவள வயற்புகலித்*
*திருஞானசம்பந்தர்*
*பாதமலர் தலைக்கொண்டு திருத்*
*தொண்டு பரவுவாம்"* என்று

ஆரம்பத்திருப்பது இவரது சிறப்பை மேலும் வலியுறுத்தி நிற்கின்றது.

**வாழ்ந்து காட்டியவர்**

நாங்கள் ஞானசம்பந்தப் பெருமானின் குருபூசையைக் கொண்டாடுவதோடு மட்டும் நின்றுவிடாமல், அவர் பாடிய தேவாரத் திருப்பதிகங்களைப் பண்ணோடு ஓதி, பக்தியோடு பாடி இறைவனைத் துதித்தல்வேண்டும். அவர் காட்டிய மார்க்கத்திலே நாமும் சென்று நற்கதியடைய முயற்சிக்க வேண்டும். சைவ நாற்பாதங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியன காட்டிய நல்வழியை நாமும் பின்பற்றி நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய நெறியில் நாமும் நம்மை வழிநடத்திச் செல்லவேண்டும். அப்போதுதான் மனித வாழ்வின் பிறவிப்பயனை அடைந்தவர்களாவோம்.

மதுரையில் பாண்டியன் சைவத்தை

**ஞானக்கதிர்**

மறந்து சமணத்தைச் சேர்ந்ததால் கவலைப்பட்டுக் கண்ணீர் வடித்த மங்கையர்க்கரசியார் தமது அமைச்சராகிய குலச்சிறையாருடன் கலந்தாலோசித்துச் சம்பந்தரை மதுரைக்கு அழைப்பது என்றும் - சைவத்தைக் காக்க வேண்டிய முயற்சிகளை எடுப்பது என்றும் - முடிவு செய்யப்பட்டது.


அவ்வாறு மங்கையர்க்கரசியின் வேண்டுதலுக்கிசைந்து மதுரைமாநகருக்கு வந்துசேர்ந்த சம்பந்தர் திருமடம் ஒன்றில் தங்கியிருந்தார். அவ்வேளை சமணரின் சூழ்ச்சியால் திருஞானசம்பந்தப் பெருமான் தங்கியிருந்த திருமடத்துக்குத் தீ வைக்கப்பட்டது.

திருவருள் வசத்தால் சகலது மறிந்த சம்பந்தர், இறைவனை வேண்டித் துதித்த வண்ணம், "பையவே சென்று பாண்டியற்காகவே" என்று பதிகம் பாடிட அது பாண்டியனைச் சென்றடைந்து பொல்லாத வெப்புநோயாகி அவனை வருத்தியது. பினனர் இறையருளார் அந்நோயைச் சம்பந்தர் நீக்கியருளினார்.

அம்பிகையிடம் பொற்கிண்ணத்திலே ஞானப்பால் பெற்றதும், திருக்கோலக்காவிலே பொற்றாளம் பெற்றதும் பின்னர் முத்துச்சிவிகை, முத்துப்பந்தர், முத்துக்குடை முதலானவற்றைப் பெற்றதும் பஞ்சம் தீரப் படிக்காசு பெற்றதும் ஆண்பனைகளைப் பெண் பனைகளாக்கியதும் திருமறைக் காட்டிலே திருக்கதவு திறக்கப் பெற்றதும், பூம்பாவையை உயிர்ப்பித்தமையும் சமணரோடு வாது செய்து அனல்வாதம் புனல்வாதங்களில் வெற்றியீட்டியமையும் திருமணத்துக்கு வந்திருந்தோர் எல்லோரையும் முத்திபெறச் செய்ததும் சம்பந்தர் இறைவன் திருவருளால் செய்த அற்புதங்களாகும.

**சிவநெறிக் கலாநிதி**
**இராசையா ஸ்ரீதரன்**

ஞானசம்பந்தப் பெருமான் சிவபெருமானுடைய பெருங்கருணைத் திறத்துக்குப் பாத்திரமாகி செயற்கரியன பலசெய்து சைவசமயம் வேரூன்றித் தழைத்தெழப் பாடுபட்ட ஒருவர் இவருடைய தேவாரத் திருப்பதிகங்கள் முதலாம், இரண்டாம், மூன்றாந் திருமுறைகளாக வகுக்கப்பெற்றுள்ளன. நற்றமிழ்ப் பனுவலாக, தீந்தமிழ்ப் பதிகமாக, செந்தமிழ்ப் பாடல்களாக நம்மிடையே உலாவரும் திருஞானசம்பந்தருடைய தேவாரத் திருப்பதிகங்களை பன்முறை பிறழாது நாவாரப் பாடி நாமும் பயனடைந்து கேட்போரையும் பயனடையச் செய்து நற்கதிப் பேறடைய வழிசமைப்போம். *



**மானிப்பாய் மருதடி விநாயகா ஆலய அறநெறிப் பாடசாலையினரால வெளியிடப்பட்ட "மருதடியான் மலர்" நூலின் பிரதியை ஓய்வுபெற்ற அதிபர் சுடர் இ.மகேந்திரன், முதுபெரும் புலவர் கலாபூஷணம் வை.க. சிற்றம்பலத்துக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம். அறநெறிப்பாடசாலை அதிபர் சமூகஜோதி கா.கணேசதாசனும் படத்தில் காணப்படுகின்றனர்.** *(படம்: வலி. தெற்குச் செய்தியாளர்)*

தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறி பற்றிய
SAAMSTECH இன்

## முக்கிய அறிவித்தல்

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக எமது தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறியைத் தொடரும் மாணவர்களுக்காக அனுப்பிவைக்கப்பட்ட ஆயிரக் கணக்கான புத்தகங்களின் பொதிகள் வவுனியா தபாலகத்தில் தேங்கியிருப்பதால், இதுவரை புத்தகங்களைப் பெறாதவர்கள் இம்மாதம் 5,6,7 ஆம் திகதிகளில் **றிம்மர் மண்டபத்தில் (Trimmer Hall) (யாழ். மத்திய கல்லூரி அருகில்)**

நடைபெறவுள்ள இலவச நேரடி வகுப்புகளுக்கு வந்து புத்தகங்களை நேரடியாகப் பெற்றுக்கொள்ளவும்.

**Director**
**PSALM INSTITUTE OF ENGINEERING AND TECHNOLOGY**
22-1/4, Galle Road, Dehiwala.
011-5559222, 071-4104100.
(34-21-11-19) (சி-35396)

## புதிய, மீளமைக்கப்பட்ட கணனிகள் மலிவு விலைகளில்!

NORTH EAST TECHNOLOGIES

*(Colombo Prices)*

☆ AMD - 1.8 GHz/128 MB/40GB - 40,400/=
☆ P - 4 - 1.8 GHz/128 MB/40GB - 47,100/=
☆ P - 4 - 2.0 GHz/128 MB/40GB - 47,500/=
☆ P - 4 - 2.4 GHz/128 MB/40GB - 49,600/=
☆ P - 4 - 2.8 GHz/128 MB/40GB - 53,000/=
☆ P - 4 - 3.06 GHz/128 MB/40GB - 63,600/=
(Hy perthreading Technologies)
Mercury Intel Chlpset Mather Board
40GB Maxtor Hard Disk
128 MB DDR Ram
Perx ATX Casing
52X LG CD Rom
Perx Keyboard and Mouse
15" Perx Advace Colour Monitor

3Years Warranty

மற்றும்
☆ P - 1 - 200Mhz/32 MB/1.6GB - 12,900/=
☆ 15" IBM, Compaq, DEIL, Samsung Acer. diamond view monitors - 6,800/=
(6 Months Warranty)

தொகையாகப் பெற்றுக்கொள்பவர்களுக்கு விசேட கழிவுகள்!

(C/35390) (26-21-11-19)

**வட கிழக்குத் தொழில் நுட்பம்**
**NORTH EAST TECHNOLOGIES NET**
**34, Saddanather Road, Nallur, Jaffna.**
T.P.:021 - 2223786 - 0777 - 708498. (hotline)

## இசை நாடக விழா

யாழ்.திருமறைக்கலாமன்றத்தின், ஏற்பாட்டில் இசை - நாடக விழா ஜூலை மாதம் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் யாழ்.நகரில் நடைபெற வுள்ளது.

இசை - நாடக விழாவின் இசை மற்றும் நாடகம் தொடர்பான கருத் தரங்குகளும் கலை நிகழ்வுகளும் நடத்த ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை 'ஞான சௌந்தரி' என்ற இசை நாடகம் ஜூலை மாதம் 9ஆம், 10ஆம், 11ஆம திகதிகளில் மேடையேற்றப்படவுள்ளது. கடந்த 12வருடங்களுக்கு முனனதாக யாழ். நகரில் மேடையேற்றப்பட்டு மகத்தான வரவேற்பைப்பெற்ற இந்நாடகம் மீண்டும் யாழ். திருமறைக கலா மன்றத்தினால் மேடையேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஒ-9)

## விண்ணில் ஒரு விந்தை நிகழ்வு

122 வருடங்களிற்குப் பின்னர் விண்வெளியில் நிகழும் அபூர்வ நிகழ்வைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு இலங்கை வாசிகளுக்குக் கிடைக்க உள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வெள்ளிக்கிரகம் பூமிக்கும் சூரியனுக கும் இடையே பயணிக்கும் போது ஏற்படும் கிரகணம் 6 மணித்தியாலங்கள் நீடிக்கும்

முற்பகல் 11.14 மணி தொடக்கம் பிற்பகல் 5.23 மணி வரையான பகற்பொழுதில் நடைபெறும் இந்த நிகழ்வில் சூரியனை ஒரு கரும்புள்ளி ஊடறுத்துச் செல்லும் காட்சி போன்று தென்படும் இத்தகவல்களை ஆதர்சி கிளார்க் விண் வெளி மன்றத்தின் பிரதான விஞ்ஞானி சந்தண விஜயரத்ன தெரிவித்தார்.

**சயன்ஸ் அக்கடமி**
நெல்லியடி
**SPOKEN ENGLISH**
பேச்சுப் பயிற்சியுடன்
வெள்ளி, புதன் } 8 - 9
பிரிவு II Spoken English ஆரம்பமாகின்றது.
கணனிக் கல்வி பெறுவதற்குவிசேட நேரசூசி
**N.C.A. கல்வி நிறுவனம்**
சாரையடி, பருத்தித்துறை
**Spoken English**
புதன், வெள்ளி } 9 - 10
புதியபிரிவு II Spoken English
மாணவற்கேற்ப நேரசூசி ஒழுங்குடன் பேச்சுப் பயிற்சியுடன் ஆரம்பம்.
(32717)(42-21-11-19)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



மண்மகிழ 1922 - 06 - 09

கண்நெகிழ 2004 - 05 - 06

கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த

### கந்தையா சின்னத்தம்பி

நாளை (05-06-2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னராது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கச்சாய் வடக்கு,
கொடிகாமம்.
(32722)(26)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருந்திய அழைப்பும்



மண்ணில் 12 - 03 - 1922

விண்ணில் 05 - 05 - 2004

### திருமதி தங்கம்மா சுந்தரம்

அன்பின் திருவுருவே.....
பாசத்தின் உறைவிடமே....
உணர்வாய் எம்மோடு வாழும்
இதய தெய்வமே! நீர் பிரிந்து
முப்பத்தொரு நாள்கள் சென்றாலும்
உம் நினைவலைகள் என்றும் ஆறாது.

இன்று (04.06.2004) வெள்ளிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

கைதடி கிழக்கு,
கைதடி.
(சி-35392)(40-11-19-21)

## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

# கேள்வி அறிவித்தல்

எமது வலிகாமம் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் பின்வரும் வேலைகளைச் செய்வதற்கான கூறுவிலை தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றது.

| வேலை | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01 | நவாலி போத்தலடைப்பு நிலையத்தில் சைக்கிள் கொட்டகையும 10' X 10' அறையும் அமைத்தல் | 250.00 | 1650.00 |
| 02 | காரியாலத்தில் கலையரங்க மண்டபம் கூரை திருத்தமும் அலுமினியக் கூரைத் தகடு பொருத்துதலும் | 250.00 | 1350.00 |

**கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 04-06-2004 - 14-06-2004**
**கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி: 15-06-2004 முற்பகல் 11.00 மணி வரை.**
**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி: 15-06-2004 நண்பகல் 12.00 மணி**

கேள்வி விண்ணப்பத்தினையும் நிபந்தனைகளையும் எமது கொத்தணியின் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
**வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.**
பிப்பிலிச்சந்தி, மானிப்பாய்.

(சி-35397)(21-11-19)

## மரண அறிவித்தல்கள்



### கந்தையா நடராஜா
(மேசன்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, கெருடாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா நேற்று (03.06.2004) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நடராஜா - முத்தம்மாவின் அன்புக் கணவரும கமலாவதி (முத்தையன்கட்டு), மாயாவதி (துணுக்காய்), தேவமாலா (நெடுங்கேணி), இந்திராணி, தேவபாலன், அம்பிகாபதி தர்மபாலன் (சாவகசசேரி) ஆகியோரின் தகப்பனாரும் காலஞ்சென்ற சோமசுந்தரம், காலஞ்சென்ற சிவலிங்கம், காலஞ்சென்ற இராமநாதன், வீரசிங்கம், சின்னத்துரை சாந்தி, பாமா ஆகியோரின் மாமனாரும் நாகேநதிரம், முத்தையா, ஆச்சிமுத்து ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.06.2004) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு.நடராஜா தேவபாலன் (மகன்).

(C/35415)(40-11-19-21)

### கந்தையா சின்னத்துரை

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்துரை புதன்கிழமை (02.06.2004) காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும் பிரான்சிஸ் ரவிச்சந்திரன (Managing Director Voice Telecom, நெதர்லாந்து) மனோரஞ்சிதம், காலஞ்சென்ற கலாரஞ்சிதம் மற்றும் பாஸ்கரன் (பிரான்ஸ்), சிறிதரன், யோகரஞ்சிதம், சிறீரஞ்சன் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெனோவா ஜூலியற் (நெதர்லாந்து), சிறிபுலேந்திரன், கலாரஞ்சினி (பிரான்ஸ்), சுபாஜினி இரவிச்சந்திரன் நொயலின் ராஜி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும் சஞ்சீவன், ஜந்துஷன், ஜிஷார் அஸ்வின், பெனுவல் நிகேதன், தல்மன் தருண், சிந்துஜா, லெஸ்லின், கோபிகா, பபிதன், கயல்விழி, மதுஷன், றிஷான், அவினாஷ் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் காலஞ்சென்றவர்களான சந்தாதோட்டம் பருத்தித்துறையைச் சேர்ந்த செல்லம்மா, நகுலம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.06.2004) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருமதி சி.சின்னம்மா*
*154 ஆம் கட்டை.செல்வபுரம். திருமுறிகண்டி., கிளிநொச்சி.*

தகவல்:
குடும்பத்தினர்.
(32702) (34)

# இந்துமதம் வழங்கிய சுதந்திரத்தை தீயவழியில் செல்லப் பயன்படுத்தாதீர்!

## சுவாமி ரமண சைதன்யா அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன்4

இந்துமதம் வழங்கியுள்ள சுதந்திரத்தைத் தீய வழிகளில் செல்லப் பயன்படுத்தக்கூடாது.

- இவ்வாறு தெரிவித்தார் சுவாமி ரமண சைதன்யா.

நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்தில் இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் பங்குகொண்டு சொற்உரையாற்றும்போதே அவர் இதனைத தெரிவித்தார்.

அவர், மேலும் கூறியதாவது:-

இந்து விழிப்புணர்வு வாரத்தை யாழ்ப்பாணத்தில் அனுஷடிக்க ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளோம். இதன் மூலம் சமயம் குறித்த கருத்தினை மக்கள் மத்தியிலும் குறிப்பாக இளைய தலைமுறையினர் மத்தியிலும் விளக்கமளிக்கவுள்ளோம்.

இந்துசமயம் சுதந்திரத்தை மக்களுக்கு வழங்கியுள்ளது. அச்சுதந்திரம் தீயவழியில் செல்வதற்கு இந்து மக்களிற்குப் பாதை அமைந்துள்ளது என்பது வேதனைக்குரியது.

இன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இளையதலைமுறையினர் தீய வழிகளில் செல்வதற்கு வழிகாட்டுகின்றன.

தொலைக்காட்சி மற்றும் கணனி வசதிகள் இந்தக்காலத்தில் தீய செயல்கள் வீடுதேடி வர வழிவகுக்கின்றன.

இந்தியாவில் இவ்வாறான செயல்கள் அதிகரித்துள்ளன. யாழ்ப்பாணத்திற்கும் இந்நிலை வரவுள்ளது.

இந்நிலையில் ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளில் அக்கறையுடன் இருக்கவேண்டும்.

சமூகத்தில் ஒவ்வொரு மனிதனும் கொள்ளும் விழிப்புணர்வு ஒட்டுமொத்த சமூக விழிப்புணர்வாகக் கருதப்படும் - என்றார். (ஒ-12)

# இறால் வளர்ப்போர் சங்கம் நேற்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஜூன்4

யாழ். மாவட்ட இறால் வளர்ப்போர் ஊக்குவிப்புச் சங்கம் நேற்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் நேற்றுக் காலை 10 மணிக்குப் பேராசிரியர் கா.சித்திரவடிவேலு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 14 பேர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டது.

இந்தச் சங்கத்தின் தலைவராக சி.தவரட்ணம், உபதலைவர்களாக சுரேன் வின்சன், க.சூரியகுமாரன், செயலாளராக கா.முத்துக்குமாரன், உபசெயலாளராக வ.சிறிதரன், பொருளாளராக த.கெங்காதரன் ஆகியோரும் சங்கத்தின் ஆலோசகர்களாகக் கடல்வள அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் கா.சித்திரவடிவேலு, எஸ்.தயாபரன், டினேஸ சிகாமணி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் இறால் வளர்ப்பில் ஆர்வமுள்ளோர்கள் பலர் கலந்துகொண்டனர். (10-ரி)

# குளிக்கச்சென்ற சிறுமி குளத்தில் மூழ்கி மரணம்!

## புளியம்பொக்கணையில் பரிதாபம்

விசுவமடு,ஜூன்4

குளத்தில் குளிப்பதற்காகச் சென்ற சிறுமி ஒருத்தி நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை புளியம்பொக்கணை பகுதியில் இடம்பெற்றது. நாகேந்திரபுரத்தைச் சேர்ந்த தியாகராசா லக்ஸிகா (வயது8) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

புளியம்பொக்கணை பெரிய குளத்துக்குப் பெற்றோருடன் சென்ற சிறுமி, குளித்துவிட்டு கரைப்படியில், ஏறி நின்றார் என்றும் -

பெற்றோர் குளித்து முடித்துவந்து சிறுமியைத் தேடியபோது அவரைக் காணவில்லை என்றும் - கூறப்பட்டது.

இதனையடுத்து குளத்தில் தேடியபோது சிறுமியின் சடலம் மீட்கப்பட்டது. (9-ரி)

# பயணிகள் படகுகளுக்குத் தகுந்த சான்றிதழ்கள் வழங்குவது அவசியம்

## வேலணைப் பிரதேச செயலரிடம் கோரிக்கை

கொக்குவில்,ஜூன்4

யாழ் மாவட்டத்திலுள்ள தீவுகளுக்கிடையில் பயணிகளை ஏற்றியிறக்கும் படகுகளை பரிசோதனைசெய்து கடற்பயணத்திற்கு உகந்தன என அத்தாட்சிப்படுத்தித் தருமாறு தனியார் படகு உரிமையாளர் சங்கம் வேலணைப் பிரதேச செயலரைக் கேட்டுளளது.

வேலணைப் பிரதேச செயலருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

கடற்பயணம் செய்வதற்குப் படகுகள் பொருத்தமானவையா என்ற பரிசோதனை 1983ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் கொழும்புத்துறை முகத்திலிருந்து வருகைதரும் கப்பற் பரிசோதனைக்கான ஓர் அதிகாரியினால் சோதனை செய்யப்பட்டுப் படகு உரிமையாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுவந்தன.

1983 ஆம் ஆண்டிலிருந்து பாதுகாப்புக் காரணங்களினால் இந்த அதிகாரிகள் குறிகாட்டுவானுக்கு வந்து இந்தப் பரிசோதனைகளைச் செய்ய மறுப்புத் தெரிவித்துவிட்டனர். இதனால், யாழ். மாவட்டக் கடற்றொழில் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரே இப்பரிசோதனைகளைச் செய்து சான்றிதழ் வழங்கிவந்தார். தற்போது மேலிடத்து உத்தரவு காரணமாக கடற்றொழில் திணைக்களத்தின் உத்தியோகத்தர் இச்சோதனையைச் செய்ய மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதனால் நாம் எமது படகுகளுக்குப் பரிசோதனைச் சான்றிதழ் பெறமுடியாத நிலை உள்ளது. இதனால், மாவட்டச் செயலகத்தில் இதுவரை பெற்றுவந்த அனுமதிப் பத்திரத்தையும் பெறமுடியாதுள்ளது.

இந்த இக்கட்டான நிலையைத் தகுந்தவாறு பரிசீலித்து கப்பல் பரிசோதகர் மீண்டும் குறிகட்டுவானுக்கு வந்து எமது படகுகளைப் பரிசோதித்து சான்றிதழ் வழங்குவதற்கோ அல்லது யாழ். கடற்றொழில் திணைக்களப் பரிசோதனையாளர் சான்றிதழ் வழங்குவதற்கோ ஏற்பாடுசெய்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன ஆலய திருவிழாக்காலம் விரைவில் ஆரம்பிக்க இருப்பதால் அதற்கு முன்னதாகச் சான்றிதழைப் பெற ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-76)

# குடும்பநல அலுவலர் பயிற்சிக்கு நேர்முகப் பரீட்சை விரைவில்

குருநகர்,ஜூன்4

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நியமிக்கப்படவுள்ள மாணவக் குடும்பநல உத்தியோகத்தர்களைப் பயிற்சிநெறியில் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இயங்கும் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களில் நடைபெறவுள்ளன என வடக்குக் கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.ஏ.இரத்னாயக்கா வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இயங்கும் பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதன்படி நேர்முகப்பரீட்சைகள் மன்னார் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இம்மாதம் 8ஆம் திகதியும் - கிளிநொச்சி பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இம்மாதம் 9ஆம் திகதியும் -

யாழ்ப்பாணம் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இம்மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளிலும் - இடம்பெறவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கு நேர்முகப்பரீட்சை கிளிநொச்சி பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும்.

இந்நேர்முகப் பரீட்சை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை அவ்வப் பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும்.

யாழ்ப்பாணப் பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சை பதில் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறும். (ஒ-51)

# தனியார் கல்வி நிலையங்களில் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் மாலை நேர வகுப்புக்களைத் தடைசெய்க

## ஆலயப் பிரதம குரு வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூன்4

இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் தென்மராட்சியிலுள்ள சைவாலயங்கள் பலவற்றில் இடம்பெற்றுவரும் அறநெறிப்பாடசாலைகளின் நன்மை கருதி தனியார் கல்வி நிலையங்களில் பிரதி வெள்ளி தோறும் இடம்பெறும் மாலை நேர வகுப்புக்களைத் தடை செய்வதற்கு ஆவன செய்யவேண்டும்.

- இவ்வாறு சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயக்குரு த.வீரபத்திரக்குருக்கள் சாவகச்சேரிப் பிரதேச செயலருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாணவர்கள் பிரதி வெள்ளி தோறும் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதால் எமது பிரதேசத்தில் இயங்கிவரும் அறநெறிப் பாடசாலைகளுக்கு மாணவர்களின் வரவு குறைவாக உள்ளது. இதனால் அவற்றை ஒழுங்காக இயககமுடியாதுள்ளது.

இதனைத் தவிர்ப்பதற்குத் தனியார் கல்வி நிலைய ஒன்றியத்துடன் தொடர்பு கொண்டு வெள்ளி தோறும் தனியார் கல்வி நிலையங்களில் மாலை நேர வகுப்புக்கள் நடைபெறுவதைத் தடை செய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம் - என்று உள்ளது. (-10-ரி)

# பருத்தித்துறைச் சாலையை கும்பானுக்கு மாற்ற எதிர்ப்பு.

கொக்குவில்,ஜூன்4

போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலையை கும்பானுக்கு இடம் மாற்றம் செய்யவேண்டாமென பருத்தித்துறைப் பிரதேச செயலாளரைப் பொதுமக்கள் கோரியுள்ளனர்.

அப்பகுதி மக்கள் பருத்தித்துறைப் பிரதேச செயலருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இக்கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

அவர்கள் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடியிருப்புக்களின் மத்தியில் இப்படியான வேலைத்தளம் அமைவதால் கழிவுநீர் வெளியேறி தாழ்வான இடங்களில் தேங்கும் நிலை உள்ளது. அத்துடன், கும்பானைச் சூழவுள்ள கிராமங்களில் உள்ள கிணறுகள் சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் தரம் மாறுபடும் நிலை உள்ளது.

மேலும் வேலைத்தளத்தில் ஏற்படும் சத்தங்கள் அயலில் வசிப்பவர்களின் நாளாந்த வாழ்க்கையைப் பாதிக்கவும் கூடும்.

சூழல் பாதிப்புக் காரணமாக தற்போது அமைந்துள்ள இடத்திலிருந்து குடியிருப்புக்கள் அற்ற இடத்திற்கு சாலையை மாற்றவேண்டுமெனப் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியும் பல வருடங்களுக்கு முன்பு கருத்துத் தெரிவித்தமையால் இச்சாலையைக் குடியிருப்புக்களற்ற தும்பளை மருதங்கேணி வீதிக்குக் கிழக்குப் பக்கமாகவுள்ள பகுதிக்கு மாற்றஞ் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-76)

## சம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜூன்4

இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் ஸ்ரீசட்டநாதர் சுவாமி ஆலயத்தில் ஆலய பூசையைத் தொடர்ந்து ஞானசம்பந்தப் பெருமானுக்கு அபிஷேகம், பூசை ஆகியன இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய திருப்பதிக முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (10-ரி)

★ ★ ★

சுழிபுரம்,ஜூன்4

வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயத்தில் இன்று காலை 7 மணிமுதல திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை நடைபெறவுள்ளது.

ஞானசம்பந்தர் அருளிய திருமுறைகள் ஓதல், புராண படனம், விசேட பூசை வழிபாடுகள் என்பனவும் நடைபெறும். (-10-28)

★ ★ ★

குடத்தனை,ஜூன்4

பொலிகண்டி கந்தவனக்கடவை சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் அமைந்துள்ள நாற்குரவர் ஆலயத்தில் இனறு வெள்ளிக்கிழமை காலை திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை நடைபெறவுள்ளது. (-10-78)



உரும்பிராய் கிழக்கு சிவபூதராயர் ஆலயத் தேர்த்திருவிழாவின்போது எடுக்கப்பட்ட படம். *(படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)*

# தென்மராட்சிப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை

தென்மராட்சி,ஜூன்4

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வரையுள்ள பல பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் பரீட்சையில் ஆங்கில பாடத்துக்குத் தோற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆங்கில ஆசிரியர்கள் இல்லாததால் தமது பிள்ளைகள் ஆங்கில அறிவினைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளனர் என்று பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாகத் தென்மராட்சிக் கல்வி வலய அலுவலகத்துடன் தொடர்புகொண்டபோது வலயத்தில் உள்ள பாடசாலைகளில் 120 ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆளணி உள்ளபோதிலும் 22 ஆசிரியர்களும் 12 பகுதி நேர ஆசிரியர்களும் மட்டுமே கடமையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## இந்திய பரம்பரை ஜோதிடர்



அருள்வாக்கு
**அம்பிகா அம்மா**
மீண்டும் யாழ்.மக்களின் விருப்பத்திற்கு இணங்கி
யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.



உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்து கொள்ளவும்.
உங்கள் வாழ்வில் வெற்றியும், சுபீட்சமும் அடையவும்
வியாழன் மாற்றப் பலன்களை அறிந்துகொள்ளவும்.

**அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் சந்திக்கவும்**

அம்மாவைச் சந்திக்கும் இடம் :
அருள்வாக்கு அம்பிகா அம்மா
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(முன்பு இருந்த அதே பழைய இடம்).
ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ்/நியூ லிங்கம் கூல்பார் அருகில்.
(32711) (26-12-19)



## YAPJACK விற்பனை

- ★ குறைந்த முதலீடு
- ★ இயக்குவது இலகுவானது
- ★ இலாபகரமானது
- ★ தொலைத்தொடர்பு நிலையங்கள்
- ★ அரச தனியார் நிறுவனங்கள் மற்றும்
- ★ தனிப் பாவனையாளர்களுக்கு உகந்தது.

கணனிகள் இல்லாமல் இக்கருவி மூலம் Internet இன் ஊடாக நேரடியாக வெளிநாட்டு அழைப்புக்களைப் பெற செலவாகும் தொகை,
**ஒரு நிமிடத்துக்கு ரூ.3.20 மட்டுமே.**

மேலதிக விவரங்களுக்கு:
விசிற்றோக்.நெற்.
315A. பலாலி வீதி.
முதலாம் மாடி பரமேஸ்வராச் சந்தி.
திருநெல்வேலி.

தொலைபேசி இல.:
222 6637 or 222 7387
(31221)(40)


## ஊர்காவற்றுறை புளியங்கூடல் ஸ்ரீமகாமாரி அம்மன் ஆலயம்

உற்சவகால தற்காலிக கடைகளுக்கான
காணித்துண்டுகளின்
**பகிரங்க ஏலம்**
புளியங்கூடல் ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலய மகோற்சவம்

*எதிர்வரும் 11-06-2004 தொடக்கம் பத்து நாள்கள் நடைபெறவிருப்பதால் இக்காலப்பகுதியில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான. வியாபார வாகனங்கள் நிறுத்துவதற்கான காணித்துண்டுகள் 06-06-2004 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.*

மகாமாரி சனசமூக நிலைய நிர்வாகம்.
புளியங்கூடல். ஊர்காவற்றுறை. (32726) (26-11-12) - **செயலாளர்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அந்தோனிப்பிள்ளை எலிசபேத் (பெர்ணபேத்)



காலஞ்சென்ற அவுறான் அந்தோனிப்பிள்ளையின் மனைவி எலிசபேத் (பெர்ணபேத்) 02.06.2004 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

33, ஓடக்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
(32712) (12-19-26)

தகவல்:
அ.யூலியஸ் மகேசன்,
அ.ட.லயனல் *(மகன்மார்).*

## திருமதி இளையதம்பி பொன்னம்மா



உச்சியோடை லேன், மானிப்பாய் வடக்கைச் சேர்ந்த திருமதி இளையதம்பி - பொன்னம்மா அவர்கள் 03.06.2004 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு இளையதம்பியின் அன்பு மனைவியும் தவமணி, யோகமலர், சந்திரன், காலஞ்சென்ற கிருபைமலர் மற்றும் சிங்கராசா, ஜெயராசா (ஜேர்மனி), சிவபாக்கியம், இராசதேவி (ஜேர்மனி), வசந்தகுமார் (M.P.C.S. மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இந்திரன், விசுவலிங்கம், லோஜனா, சுபோதினி, மல்லிகா (ஜேர்மனி), முத்துக்குமார், தெய்வலிங்கம் (ஜேர்மனி), சுமதி ஆகியோரின் மாமியாரும் லதா, தயாபரன், தயாளன், ஈஸ்வரன், அனுஷியா, ஜெயபாலன், ஸ்ரீபாலன், உஷாஜினி, சுதர்சன், சுவர்ணன், சுகிர்தன், டிலானி, டினேஸ், பைரவி, டினிசியா, திபிஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.06.2004) வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*உச்சியோடை லேன்,*
*மானிப்பாய் வடக்கு.* (32723)(40-12-19-26)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி மாகிறேட் அந்தோனிப்பிள்ளை



புலோலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், இல.7, சென்.பற்றிக்ஸ் வீதியை வதிவிடமாகவும் கொண்ட மாகிறேட் அந்தோனிப்பிள்ளை நேற்று (03.06.2004) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்ணக்கோன் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் பற்றிமா, அன்ரன், ராஜக்குமார் (கனடா), பசில் (கட்டார்), நிறைஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜானகி (கனடா), ராகினி, கில்மன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் உஷாந்தினியின் பேர்த்தியும் சொர்ணம்மா, ராசக்கோன், நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (05.06.2004) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்று, பின்னர் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலியின் பின்பு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.7,சென்.பற்றிக்ஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (32725)(40-11-12-26)

தகவல்:
பிள்ளைகள்.

### மெய்வன்மைப் போட்டி

மீசாலை வடக்கு சுடர்ஒளி முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்துகொள்வார். (-10-117)

## சமுர்த்தி வங்கிக்கு புதிய கட்டடம்

வலி.மேற்குப் பிரதேச சமுர்த்தி வங்கியின் புதிய கட்டடத்தை சுழிபுரத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வலி.மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான சுழிபுரத்திலுள்ள காணியைச் சுவீகரித்து சமுர்த்தி வங்கியின் புதிய கட்டடத்தை அதில் நிறுவுவதற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக வலி.மேற்கு பிரதேச சபையினரை விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வலி.மேற்குச் சமுர்த்தி வங்கியின் புதிய கட்டடத்துக்கு சம்பந்தப்பட்ட அமைச்சினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-175)

## தேவை

பேக்கரிக்கு பில் கிளாக் தேவை.
(அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
*நேரில் வரவும்*
**றொலெக்ஸ் மாட்,**
**118, கஸ்தூரியார் றோட்,**
**யாழ்ப்பாணம்** (32728)(38)

## அறிவித்தல்

**இலங்கை ஆசிரியர் சங்கம்**
**யாழ்.மாவட்டக்கிளை,**
**வடமாகாண ஆசிரியர் சங்கம்**

2004.06.06 ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருந்த வருடாந்தப் பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத் தருகின்றேன்.

ஆ.பாலச்சந்திரன்,
செயலாளர். (32731)(40)

# கலாசாரம் பேணுவோரின் கண்காணிப்பால் பயன்

வலி.வடக்கு,ஜுன்4

சுன்னாகம் முதல் தெல்லிப்பழை வரையிலான வீதிகளிலும் கடைகளின முன்னாலும் நின்று, பெண்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தி வந்தவர்கள் கடந்த ஒருவார காலமாகக் காணாமற்போயுள்ளனர்.

மோட்டார் சைக்கிள்களில் கலாசாரம் பேணும் இளைஞர்கள் மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கை காரணமாகவே அட்டகாசம் புரியும் இளைஞர்களின் தொல்லைகள் குறைந்துள்ளன என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றார்கள்.

இத்தகைய நிலைமை தொடர உரியவர்கள் தொடர்ந்தும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடவேண்டும் என்றும் - அதன் மூலமே இத்தகைய நிலைமை தொடரும் என்றும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

இதேநேரம் இப்பகுதியில் அட்டகாசம் புரிந்த சிலருக்கு குறிப்பிட்ட இடத்திற்கு வரும்படி அழைப்பு வந்ததாகவும் -

அதனைத் தொடர்ந்து அந்த இளைஞர்கள் ஊரைவிட்டு கொழும்பு நோக்கிப் பயணமாகினர் என்றும் - கூறப்படுகின்றது. (ஒ-86)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 582 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 01-06-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 4712614- 4726059 |

வெற்றி இலக்கங்கள்
**02 04 09 45**

லக்கினம் துலாம்

ஜக்பொட் பரிசு
ரூபா.48,32,800/-
வெல்லப்படவில்லை.
இந்த வெள்ளிக்கிழமைக்கான
ஜக்பொட் ரூபா. 55,00,250/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,98,878 | 10/- | 29,88,780/- |
| 2.இலக்கங்கள் | 27,408 | 20/- | 5,48,160/- |
| 1.இல + லக்கினம் | 27,113 | 30/- | 8,13,390/- |
| 2.இல + லக்கினம் | 2,546 | 100/- | 2,54,600/- |
| 3.இலக்கங்கள் | 732 | 500/- | 3,66,000/- |
| 3.இல + லக்கினம் | 63 | 5,000/- | 3,15,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 48,32,800/- | - |
| மொத்தம் | 3,56,744 | - | 56,85,930/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 56,85,930/-

தொடர் இல. 5695593 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 ஜுன் 04ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4714729-1-78
4719285-9-91
4725660-8-92
4713659-0-55
4713271-1-48


# கேள்வி அறிவித்தல்

## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்.

1) யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரினால் பின்வரும் வேலைகளிற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விவரம் | ஆகக்குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகை | மீளளிப்புச் செய்ய முடியாத தொகை |
|---|---|---|---|
| குருநகர் தொடர்மாடிக் கட்டட மலசல கூடம், குளி, தாங்கிகள், நீர்வழி விநியோகம் ஆகியவைகளின் திருத்த வேலைகள் - Stage II | M7 | Rs.35,000/= | Rs.750/= |

2) நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால்(ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவுதரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

3) இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4) கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

5) கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம், புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் மீளளிப்புச் செய்யக் கூடிய வைப்புத்தொகை ரூபா 35,000/= மும் மீளளிப்புச் செய்யமுடியாத தொகை ரூபா 750/= ஐயும் செலுத்தி 24-06-2004 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை விண்ணப்பப்படிவத்தினையும் BOQவையும் பெற்றுக்கொள்ளலாம்.

6) கேள்வி ஆவணத் தொகுதிகளை (இணைப் பிரதிகளில்) யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் எல்லா அலுவலக நாள்களிலும் அலுவலக நேரங்களிலும் இலவசமாகப் பார்வையிடலாம்.

7) பொறி வைத்த கேள்விகளைக் கொண்ட தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் "குருநகர் மாடி வீட்டு கட்டடங்களிற்குச் செய்யவேண்டிய அத்தியாவசியத் திருத்த வேலைகள் - StageII" என எழுதப்படவேண்டும்.

8) பொறியிடப்பட்ட கேள்விகள் "தலைவர், யாழ்.மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் 25-06-2004 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக எங்களுக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும் அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். இதன் பின்னர் கேள்விகள் 25-06-2004 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் இருவருக்கு மேற்படாமல் சமுகமளிக்கமுடியும்

9) பொறியிடப்பட்ட கேள்விப்பெட்டி திட்டப்பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும்.

மாவட்டக் கேள்விச்சபை,
மாவட்டச்செயலகம்,
யாழ்ப்பாணம்.
03.06.2004 (சி-35420)(38-11-12-29)

செ.பத்மநாதன்,
தலைவர்,
மாவட்டக் கேள்விச்சபை.
யாழ்ப்பாணம்.

✪ அரச ஊழியருக்கு 70 வீத சம்பள உயர்வு
✪ 60,000பேருக்கு புதிய தொழில்வாய்ப்பு
✪ 14 லட்சம் பேருக்கு சமுர்த்தி நிவாரணம்

# அரசின் வாக்குறுதி என்னாயிற்று? இன்னும் ஒரு மாதமே காலக்கெடு!

## குடைகிறது ஐ.தே.முன்னணி

"தேர்தல் காலங்களில் தான்வழங்கிய வாக்குறுதியின்படி அரசாங்க ஊழியர்களுக்கு 70 வீத சம்பள அதிகரிப்பையும் 60 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்புக்களையும் 14 லட்சம் பேருக்கு சமுர்த்தி நிவாரணங்களையும் வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தால் ஐக்கிய தேசிய முன்னணி அதற்கு முழு ஆதரவையும் வழங்கத் தயார்.

ஆனால், மாகாணசபைத் தேர்தலின முன் இவற்றை நாடாளுமன்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்தவேண்டும். அதற்குஅரசாங்கம் தயாரா?

இப்படி சவால் விடுகின்றார் ஐக்கிய தேசிய முன்னணியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எம்.பி.

நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பேராசிரியர் பீரிஸ் இப்படிப் பகிரங்கமாக சவால் விட்டார்.

ஜேவிபியினரும் ஸ்ரீலசுகட்சியினரும கூட்டாகவே தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டனர். புரிந்துணர்வு ஒப்பந்தம செய்துகொண்டனர். மேடைகளில் வக்குறுதிகளை அள்ளி வீசினர். ஆனால, இப்போது அவற்றை நிறைவேற்ற முடியாமல் திணறுகின்றனர்.

அதேவேளை, ஒருவர் மீது ஒருவா குற்றச்சாட்டுக்களை சுமத்தி கடிதங்களை எழுதி ஊடகங்களுக்கும் கொடுத்து உள்வீட்டுக் குழப்பத்தைச் சந்திக்கும கொண்டுவந்துவிட்டனர். இதன் மூலம் மக்களை திசை திருப்ப முனைகின்றனர்.

ஆனால், இவர்களுக்கு கைகொடுக்க நாம் தயார்.

★ அரசாங்கம் அமைத்ததும் மூன்று மாத காலத்திற்குள் சகல அரச ஊழியர்களின் சம்பளத்தையும் 70வீதத்தால் அதிகரிப்போம்.

★ 60000 பேருக்கு நிரந்தரமான புதிய தொழில்களை வழங்குவோம்.

★ 14 லட்சம் பேருக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்குவோம்.

★ தொழில் பயிற்சி பெறும் பட்டதாரிகளுக்கு மாதம் 6000ரூபா அலவன்ஸ் கொடுப்போம். பின்பு இவர்களுக்கு நிரந்தரமான தொழில்களை வழங்குவோம்.

இப்படியெல்லாம் வாக்குறுதி அளித்தார்கள். மூன்று மாத அவகாசம் ஜூலை இரண்டாம் திகதியுடன் முடிகிறது.

எனவே, மாகாணசபைத் தேர்தலின் முன் ஜனாதிபதி இவற்றிற்கு சட்ட உருகொடுத்து நாடாளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பிக்கவேண்டும். அதற்கு அவர் தயாரா?

எரிபொருள்களின் விலை உலகச் சந்தையில் பன்மடங்கு அதிகரித்துள்ளது. அதேபோன்று கோதுமையின் விலையும அதிகரித்துள்ளது. உலகச் சந்தை நிலைவரம் எங்களுக்கு அவசியம் இல்லை. உயர்ந்தாலும் சரிந்தாலும் இப்பொருள்களின் விலைகளை அதிகரிக்கக் கூடாது என்று போராட்டம் நடத்தினார்கள் இவர்கள்.

இப்போது ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்றனர். மாகாணசபைத்தேர்தல்களின் பின்பு எரிபொருள்களின் விலையும் மாவின் விலையும் அதிகரிக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக உத்தரவாதம் அளிப்பாரா? என்றும் பேராசிரியர் பீரிஸ் பகிரங்கமாகச் சவால் விட்டார்.

ஜே.வி.பியினரும் ஜனாதிபதியும் எப்படியாவது அதிகாரத்திற்கு வந்துவிட்டால்போதும் என்று வாக்குறுதிகளை வாரிவழங்கினர். இப்போது அதனைச செயல்படுத்த முடியாமல் விழிபிதுங்கி நிற்கின்றனர் என்றும் பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சர்களான பந்துல குணவர்த்தன, ரவி கருணாநாயக்க ஆகியோ

# வேலை வழங்கும் அரசின் திட்டத்தில் பாரபட்சம் என பட்டதாரிகள் விசனம்

கொழும்பு,ஜூன்4

சுமார் 30ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதற்கான அரசின் திட்டத்தில் பாரபட்சம் காட்டப்படுவதாக வேலையற்ற பட்டதாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பட்டதாரிகளுக்கு வேலைவழங்கும் விடயத்தில் சில அரசியல்வாதிகள் தமக்கு இசைவானவர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் பாரபட்சம் காட்டுகின்றனர் என்றும் -

இந்நிலையை மாற்றித் தகுதியுள்ள பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும் எனவும் - வேலையற்ற பட்டதாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பல முறைப்பாடுகள் வேலையற்ற பட்டதாரிகளின் ஒன்றிணைந்த சங்கத்தின் தலைவர் சந்தன சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளின் இத்தகைய நடவடிக்கைகளால் நாம் குழம்பியுள்ளோம். வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்கு அரசு மேற்கொண்டுள்ள முயற்சியை நாம் வரவேற்கின்ற அதேவேளை, தகுதியான பட்டதாரிகளுக்கு மட்டும் வேலைவாய்ப்பினை வழங்குவது பற்றி அரசு ஊர்ஜிதம் செய்யவேண்டும் என நாம் அரசினைக் கேட்டுக்கொள்கிறோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-ரி)


ராஜா யாழ்ப்பாணம்
3 ஆவது வாரம்
சூர்யா, ஈஷா, மாதவன், த்ரிஷா, சித்தார்த்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
(C/34517)(22)





நிறைஞ்சனாஸ் சங்கானை
சிம்பு, த்ரிஷா, ரகுவரன் விவேக் நடித்த அலை
காட்சிநேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே) (ரீல்ஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணிக்கு AMPRICAN PIE
(சி-34420)





லக்சுமி இணுவில்
4 ஆவது வெற்றிவாரம்...
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
மிகப் பிரமாண்டமான தயாரிப்பில் சூரியா (2 வேடங்கள்). ஜோதிகா நடித்த பேரழகன்
தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.) (ரீல்ஸ்)
(32575)(12)





## விற்பனைக்கு

பாவனையில் உள்ள JAPAN YAMAHA XS 250 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
ஹரி வீடியோ சென்ரர்
மிலேனியம் கட்டடத் தொகுதி, கலட்டி.
(மிலேனியம் ரெஸ்ரோரண்ட் அருகில்)
(32735)(37-16-13)



## NEWTON

342,ஸ்ரான்லி வீதி,யாழ்.

ENGLISH CLASSES

✱B.A. -I PAPER 7.30-8.30(N.T)
✱ A/L எடுத்த மாணவர்களிற்கான புதிய பிரிவு ஆரம்பம்.
Sat. 8.30-9.30
(32734)(36-)



## விற்பனையாகிறது

❑ நன்னூல் காண்டிகையுரை ஆறுமுகநாவலர்
 சொல்லதிகாரம்  எழுத்ததிகாரம்
❑ பாடசாலை மட்ட மாணவர் கணிப்பீட்டு அறிக்கைப் புத்தகம் 6-9
❑ மாணவர் ஆற்றுகை அறிக்கை 10,11
❑ மாணவர் முன்னேற்ற அறிக்கையும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டமும்

ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
021-2222573
(சி-35400)(32-13-16-36)



## நியூட்டன்

ஆரியகுளம் சந்தி - யாழ்நகா

A/L-2006
Geo. - K. கிரிதரன்
Po.Sc.- பொன். சந்துரு
H.Cul. - K. சத்தியதாசன்
Dra. - I சத்தியா
IQ.- T. திருமுருகன்
Log. - P கமல்
Tam. - M.s. அமரசிவம்
A/L 2005துரித மீட்டல் வகுப்பு
ஆரம்பம்: 05-06-2004 சனி 9 a.m.
(32699)



## குழாய்க் கிணறு அமைத்தல்

இயந்திர உபகரணங்கள் மூலம் குழாய்க்கிணறு அமைக்க விரும்புபவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:
ரூலின்ஸ்,
6, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 - 5534
(32732)(38-13-16-36)



நாகம்ஸ் சுன்னாகம்
டொல்பி ஒலி அமைப்புடன் விஜய், த்ரிசா, பிரகாஷ்ராஜ் (ரீல்ஸ்) நடித்த கில்லி
தினசரி: 11.00, 3.00, 7.00
வெள்ளி, சனி, ஞாயிறு: 11.00, 3.00, 7.00,10.00
(C35399)(12)




## அறிவித்தல்

### சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் (வ/து) சுன்னாகம்

### கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல் 2004.06.06

மேற்படி சங்கத்தின் துணை விதி 20.02இன்படி தன்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக இக்கிளைகளின் பொதுச்சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பந்தி 9 இற்கமைய கீழ் குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறுமென யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. கிளைப் பொதுச்சபைக் கூட்ட ஆரம்பம் - 2004.06.06 முற்பகல் 10.00 மணி
2. கூட்டம் நடைபெறும் இடங்கள் - விவரம் கீழ்வருமாறு:-

| தொ.இ | கி.இல | கி.பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | 129 | நாக்கணாவத்தை | வாணி அறிவொளி ச.ச.நிலையம், அளவெட்டி |
| 02 | 130 | அலுக்கை | பாரதி ச.ச.நிலையம், அலுக்கை |
| 03 | 131 | பத்தானை | பாரதிதாசன் ச.ச.நிலையம், பத்தானை |
| 04 | 132 | தஞ்சிட்டி | அறிவொளி ச.ச.நிலையம், தேரிட்டி, அளவெட்டி |
| 05 | 133 | புன்னாலைக்கட்டுவன் | அறிவொளி ச.ச.நிலையம், சேச்சடி, புன்னாலைக்கட்டுவன் |
| 06 | 134 | கோட்டடி | புனித சவேரியார் முன்பள்ளி, குளமங்கால் |
| 07 | 135 | மயிலங்காடு | சுன்னாகம் பனை தெ.வ.அ.கூ.சங்க மண்டபம், சுன்னாகம். |
| 08 | 136 | மடத்துவாசல் | சிவலோகபதி ச.ச.நிலையம், கட்டுவன், மல்லாகம். |
| 09 | 138 | ஸ்ரேசனடி | தலைமைக்காரியாலயம், சுன்னாகம் ப.தெ.வ.கூ.சங்கம். |
| 10 | 139 | நவீனம் | தலைமைக்காரியாலயம், சுன்னாகம் ப.தெ.வ.கூ.சங்கம். |
| 11 | 140 | செல்லவளவு | ஐயனார் ச.ச.நிலையம், சுன்னாகம். |
| 12 | 142 | டச்சுறோட் | தமிழ்ஒளி ச.ச.நிலையம், உடுவில் |
| 13 | 143 | குப்பிளான் | தலைமைக்காரியாலயம், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம. |
| 14 | 144 | கல்லாரை | தலைமைக்காரியாலயம், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம். |
| 15 | 145 | ஈவினை | கலையரசி ச.ச.நிலையம், ஈவினை. |

சி.சிவலிங்கநாதன்.
கௌரவசெயலாளர்
சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் (வரையுள்ளது).

மின்சாரநிலைய வீதி,
சுன்னாகம். (சி.35422)(37-16-13-36)

## மரண அறிவித்தல்கள்

### கந்தர் சரவணமுத்து பொன்னையா

(இளைப்பாறிய அதிபர்)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் சரவணமுத்து பொன்னையா வியாழக்கிழமை இரவு 9.50 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியை இராசமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - அன்னமுத்து தம்பதிகளின் மூத்தமகனும் மோகன் (வவுனியா வணாகம்), றஜனி (ஆசிரியர்-கிளி/சென்திரேசா மகாவித்தியாலயம்), மாலினி (ஆசிரியர்-யா/பார்வதி வித்தியாலயம்), குகன் (குகன் மில்-கல்வயல் சாவ.), ஐங்கரன் (பொறியியலாளர், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் திருமகள் (ஆசிரியர்,யா/சென்.அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயம், பாஷையூர்), சிவாஜினி, சுமதி ஆகியோரின் மாமனாரும் சங்கவி, யாகவன், கீர்த்தி, சாரங்கன், தாட்சாயினி, சுவேதா, பிருந்தா, மீரா, ரேணுகா, சஜிதா, அகல்யா, ஆர்த்தி ஆகியோரின் பாசமிகு பேரனும் சோமசுந்தரம் (Ret.P.H.F.O) அவர்களின் சகோதரரும் கலா அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (2004.06.04) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

*காமதேனு.கல்வயல்,*
*சாவகச்சேரி. T.P.060-2212684* (சி35426)(43-13-16-37)

தகவல்:
பொ.குகன்(மில்-மகன்)

### திருமதி சுப்பிரமணியம் மகாலட்சுமி (ராசு)



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், இராமநாதன் லேன், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் மகாலட்சுமி சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் கந்தர்மடம் சுப்பிரமணியம் - சுந்தரம்மா (காலஞ்சென்ற) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா சுப்பிரமணியத்தின் (வெற்றிலைக் கடை யாழ்ப்பாணம்/திருநெல்வேலி மார்க்கெட்) அன்பு மனைவியும் திருச்செல்வி (கனடா), கலைச்செல்வி, முத்துலிங்கம் (ஜேர்மனி), மகேசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்மபுத்திரன் (கனடா), சோமேஸ்வரன், கலாராணி (ஜேர்மனி), கமலாம்பிகை (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிஷானா, அகிஷன், அபிராமி (வேம்படி மகளிர் கல்லூரி), சரண்யா, கௌஷிகன், மிதுஷன், கவிஷன், அனுஷியா, அனுஜன், ஆரணி ஆகியோரின் அன்புப பேர்த்தியும் அன்னலட்சுமி, பாக்கியலட்சுமி (கி.அ.ஜே/104, கந்தர்மடம்) ஸ்ரீஸ்கந்தராஜா (முஸ்லிம் கலாசார அமைச்சு), யோகலட்சுமி (பிரான்ஸ்), நித்தியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசரத்தினம், கனகசபாபதி, தனலட்சுமி, யோகராஜா (பிரான்ஸ்), ஜெயராஜசிங்கம், ராஜேஸ்வரி (பாக்கியம்), சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் செல்வராஜா - சுகந்தி, ஜெயக்குமார் - ஜெயந்தி, காலஞ்சென்ற ஜெயக்குமார், பிறேமதாசன் - ஆனந்தி, சுகுமார், சுரேஷ்குமார் - அருந்ததி, ஜெகதீஸவரன், ஸ்ரீலக்ஷ்மி ஆகியோரின் சிறியதாயாரும் சித்திரா, வத்சலா (பிரான்ஸ்), ராஜன் - சுகி (ஹொலண்ட்), விமல் - ராஜி, காயத்திரி ஆகியோரின அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2004) வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கோண்டாவில் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*இராமநாதன் லேன்,*
*இருபாலை.*
தொ.பே.0776241854/0776277198 (சி-35425)(36-13-16)

தகவல்:
மக்கள், மருமக்கள்.

## யாழ். வலயத்தில் தேர்தல் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜூன்4

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது பணிபுரிந்த, யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய்க் கோட்டங்களைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கான கொடுப்பனவுகள் பணமாக வழங்கப்படவிருக்கின்றன.

நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல்2 மணிவரை வலய அலுவலகத்தில் வைத்துக் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் - சம்பந்தப்பட்டவர்களை நேரில் வந்து கொடுப்பனவைப் பெறுமாறும் - கேட்கப்பட்டுள்ளது. (எ-3)

## நடேசனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெல்லியடிச் சந்தியில் இருந்து மாணவர்கள் வீதியின் இரு மருங்கிலும் அணிவகுத்து நின்று மரியாதை செலுத்தினர்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை பூதவுடல் அடைந்ததை அடுத்து, அங்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

நடேசனின் துணைவியார் கௌரி நடேசனின் பொதுச்சுடரேற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் நடேசனின் பிள்ளைகள் தந்தையின் பூதவுடலுக்கு மலர்மாலை சூட்டினர். அதைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிவநேசன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் மலர்மாலை சூட்டினர்.

தொடர்ந்து தமிழ் ஊடகவியலாளர் சங்கத் தலைவர் ஆர்.துரைரத்தினம் தலைமையில் அஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

அதன் பின் இறுதி யாத்திரை ஆரம்பமானது. 2.00 மணியளவில் ஆலங்கட்டை மயானத்தை யாத்திரை அடைந்ததும 2.15 மணிக்கு பூதவுடலுக்குத் தீ மூட்டப்பட்டது. இறுதிக் கிரியைகளை ஒட்டி நெல்லியடிப் பிரதேசத்தில் சகல வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன. கறுப்புக்கொடிகளும் சிவப்பு, மஞ்சள் கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன.(எ-3-5-15-70-173)

## தளபதி பலகல்ல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் நம்பிக்கைக்குரியவருமான வைஸ் அட்மிரல் சந்தகிரிக்கு கடற்படைத்தளபதி பதவியில் ஒரேயடியாக மூன்று ஆண்டுகால சேவை நீடிப்பை ஜனாதிபதி முன்னர் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த சேவை நீடிப்பில் இரண்டாவது ஆண்டில் கடற்படைத்தளபதி தற்போது உள்ளார்.

புதிய இராணுவத் தளபதியாக தற்போது இராணுவத்தில் சிரேஷ்ட அதிகாரியாக இருக்கும் மேஜர் ஜெனரல் சாந்தகோட்டேகொட நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், ஐ.தே.முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் யாழ். குடாநாட்டில் வடக்குத் தளபதியாக இருந்த சமயம் கடும்போக்கை வெளிப்படுத்தி, அதன் மூலம் சிங்களப் பேரினவாதிகளின் மதிப்பைப் பெற்ற ஜெனரல் சரத் பொன்சேகா அடுத்த சிரேஷ்ட நிலையில் உள்ளார். அவரும் இராணுவத் தளபதி பதவியில் கண்வைத்திருக்கின்றார் எனவும் அவருக்காக சில அரசியல் சக்திகள் வரிந்துக் கட்டிக்கொண்டு சிபாரிசு செய்துவருகின்றன எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தற்போது ஓய்வுபெறவிருக்கும் இராணுவத் தளபதி ஜெனரல் பலகல்லவுக்கு இராஜதந்திர வட்டாரங்களில் நற்பெயர் இருந்தாலும், அவருக்கு எதிராக இலங்கையின் மிக உச்சநிலை நீதிமன்றமான உயர் நீதிமன்றத்தினால் கடுமையான தீர்ப்பு ஒன்று ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் 5ஆம திகதி நடைபெற்ற பொதுத்தேர்தல் வாக்கெடுப்பு சமயம் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து தமது வாக்குகளை அளிக்க வசதி செய்யப்பட்டிருந்தது. ஆனால், மக்கள வாக்களிக்கவருவதைப் பயன்படுத்தி வாக்காளர் என்ற போர்வையில் இராணுவக கட்டுப்பாட்டுப்பிரதேசத்துக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவ இருக்கிறாாகள் என்று உளவுத் தகவல்கள் தங்களுக்குக் கிடைத்துள்ளன எனத் தெரிவித்து வாக்காளர்களை உள்ளே வரவிடாமல் இராணுவத்தினர் தடுத்தனர். இவ்வாறு இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான வாக்காளர்கள் வாக்களிக்கவரும் பாதைகளை கிழக்கிலும், வன்னியிலும் மூடுவதற்கான உத்தரவை இராணுவத்தளபதி என்ற முறையில் ஜெனரல் பலகல்லவே வழங்கியிருந்தார். அதனால், சுமார் மூன்று லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க முடியாது போயிற்று.

இந்த நடவடிக்கையை ஆட்சேபித்து ஐந்து வாக்காளர்கள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்தனர். அவர்களின் வாதங்களை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்றம், இராணுவத் தளபதியின் தான்தோன்றித்தனமான நடவடிக்கையால் மக்களின் வாக்களிக்கும் அடிப்படை உரிமை மீறப்பட்டிருப்பதாகக் கடும் கண்டனம் தெரிவித்தது. மனுதாரர் ஒவ்வொருவருக்கும் இராணுவத்தளபதி ஜெனரல் பலகல்ல தனது சொந்தப் பணத்தில் ஐம்பதாயிரம் ரூபா செலுத்தவேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இப்படி அடிப்படை உரிமை மீறல வழக்கில் உயர் நீதிமன்றத்தினால் கண்டிக்கப்பட்ட, தண்டிக்கப்பட்ட ஒருவருக்கு இராணுவச் சேவை ஓய்வின் பின தூதுவர் போன்ற இராஜதந்திரப் பதவிகளை வழங்கமுற்பட்டால் அது வீண சிக்கல்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்தும் என விடயமறிந்த வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கடும் விமர்சனங்களுக்கும் குற்றச்சாட்டுக்களுக்கும் உள் ளான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா இராணுவ சேவை ஓய்வின் பின் அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்ட சமயமும இத்தகைய பிரச்சினைகள் கிளம்பின என்பது தெரிந்ததே.

கடும் எதிர்ப்புத் தோன்றிய போதிலும், அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச அமைப்புக்களின கண்டனத்துக்கு ஆளானதைத்தவிர, நீதிமன்றத்தின் குற்றத்தீர்ப்பு எதற்கும் ஜானக பெரேரா உள்ளாகாததனால் பிரச்சினைகள் எதிர்ப்புகளுக்கும் மத்தியிலும் இராஜதந்திரப் பதவியை அவரால் பொறுப்பேற்க முடிந்தது.

எனினும், ஜெனரல் பலகல்ல இராணுவ சேவை ஓய்வின் பின்னர் ஏதேனும் அமைச்சுக்களின் செயலாளர் மற்றும் ஆலோசகர் போன்ற பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு வாய்ப்புண்டு எனக்கருதப்படுகின்றது. (க)

## சுகாதார ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்மேளனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் வேலைநிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப்பிரிவு, அவசர சத்திர சிகிச்சைப்பிரிவு, சிறுவர் பராமரிப்புப் பணிகள் என்பன தடங்கல் இன்றி தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9-7-4)

## சுதுமலை அம்மன் தேர் உற்சவம் இன்று சக்தியில்

யாழ்ப்பாணம்,ஜூன்4

கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற சுதுமலை அம்மன் ஆலய தேர்த் திருவிழாவின் விவரணத் தொகுப்பு இன்று மாலை 5.30 மணிக்கு சக்தி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிறது. (எ)

## வெளிநாட்டு நிதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய அரசு. 2 ஆயிரத்து 500 கோடி ரூபாவை மத்திய வங்கியிடமிருந்து கடனாகக் கேட்டு விண்ணப்பிதுள்ளது ஜனாதிபதியின் அரசு" என அம்பலப்படுத்துகின்றார் முன்னாள அமைசசரான ரவிகருணாநாயக்க.

நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

ஜனாதிபதி காலியாக விட்டுப் போன கஜானாவை, கடந்த 26 மாதங்களில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு மீண்டும் நிரப்பிவைத்தது.

நாட்டின் வளர்ச்சியையும், ஸ்திரமான பொருளாதாரத்தையும் சிறிதும் கருத்திற்கொள்ளாது ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகள் கஜானாவை மீண்டும் காலியாக்கிவிட்டன.

திறைசேரியில் பாதுகாப்பாக இருந்த நிதியையும் கடந்த இரண்டு மாதத்தில் காலியாக்கிவிட்டது.

உலக வங்கியும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் இப்போது கைவிரித்துவிட்டன. இதனால், அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனைச் சமாளிப்பதற்காகவே அரசு மத்திய வங்கியிடம் கடன்கேட்டு விண்ணப்பித்துள்ளது. - இவ்வாறு ரவிகருணாநாயக்க எம்.பி. கூறினார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தபோது தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியம் என்பவற்றிலும் அது கைவைத்தது தெரிந்ததே.

அரசின் கூட்டாளிகளான ஜே.வி.பி.யினர் உலக வங்கியையும், சர்வதேச நாணய நிதியத்தையும் அடியோடு வெறுப்பவர்கள்; திறந்த பொருளாதாரத்தையும் கண்டிப்பவர்கள்.

இவர்கள், பங்காளிகளாக இருக்கும் அரசுக்கு கடனுதவிகளை வழங்குவதற்கு கடன் வழங்கும் சர்வதேச நிறுவனங்கள் தயாராக இல்லை. எனவே, மத்திய வங்கியைத் தவிர இவர்களுக்கு உதவக்கூடியவர்கள் வேறு எவரும் இல்லை. மத்திய வங்கி கடன் கொடுத்தாலும் அது மக்களின் பணம்தான் அதற்குப்பொறுப்பு யார் என்பதுதான் கேள்வி - என்றும் ரவி கருணாநாயக்க கூறினார்.

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜி.நடேசன், பேராசிரியர் தம்பையா உட்பட பலரது கொலைகளுடன் தொடர்புடையவர்கள் எனப் புலிகள் சந்தேகிக்குமவர்களைக் கைதுசெய்வதற்கு படையினர் உத்தரவாதம் தந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் யுத்த சூழ்நிலையிலிருப்பது போன்ற பெரும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.(க)

A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான புதிய பிரிவு
வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
யாழ்.,பேராதனை 2004/2005
G.A.Q 1st in Com
விரிவுரைகள் 05.06.2004இல் ஆரம்பமாகின்றன.
விவரங்களுக்கு :
இயக்குநர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
57/18, ஸ்ரான்லி வீதி,
இலங்கை வங்கி முன்பாக, யாழ்ப்பாணம்.
(C/35418)(38)

SPOKEN ENGLISH & GRAMMAR
BY: S.B.Sasi
O/L பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களிற்கு பிரத்தியேக ஆங்கில வகுப்புகள் நடைபெறுகின்றன.
புதிய பிரிவுகள்
05-06-2004 ஆரம்பம்.
NEW HARY'S INSTITUTE
Vaddukoddai Road, Sithankerny.

பொருளியற் கல்லூரி
யாழ்.நகரில்
★ SPOKEN ENGLISH ★
LECTURED:
BY: NISHANTHAN
(Dip. in English)
புதிய பிரிவு ஆரம்பம்:
05-06-2004
சனி 4.00 (ப.நே.)
அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்.

COMPUTER COURSES
New Batches Start on Batch 1 : 5. 06. 2004 Batch 2 : 7. 06. 2004 Batch 2 : 19. 06. 2004 at 10.00 A.M
Diploma in Computer Programming
Diploma in Java Programming
Diploma in Visual C Programming
Diploma in Visual Basic Programming
Diploma in Information Technology



கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க
IIS
நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.
Diploma in Internet Technology
Diploma in MS Office
Diploma in Eng. Drawing & AutoCAD
Diploma in Hardware Technology
Diploma in Desk Top Publishing
INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )
Head Office:
IIS, 100, Clock Tower Road, Jaffna
T.P No: 021-222 2831 Email: iis@sltnet.lk
Branch:
IIS, Nelliyady, Karaveddy
T.P No: 021-226 3335

BRIGHTMAN
பிறவுன் வீதி, நீராவியடி, யாழ்.நகர்.
பிரிவு 2
3 மாத காலத்தில் சரளமாக உரையாட
சிங்களம்
By:லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்:05-06-2004 SAT. 3.00 p.m.
(Sat., Sun.-3.00 p.m.)

COMPUTER COURSES
கணனி வகுப்புகள்
➢ Ms.Office.
➢ DTP.
➢ Hardware
➢ Internet & E-Mail.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 06.06.2004
UNIVAC
College Of Computer Information Technology
Vaddukoddai Rd. Sithankerny.

BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ்.நகர்.
பிரிவு 1
பௌதிகம்
PAPER CLASS
A/L 2004 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கானது
ஆரம்பம்:05-06-2004 SAT. 7.00 a.m.
(Sat., Sun.7.00-8.30 a.m.)
பிரிவு 2
A/L 2005
மாணவர்களுக்கானது
ஆரம்பம்:05-06-2004 SAT. 3.00 p.m.
(Sat., Sun.-3.00 )
By: ஜெயசீலன்

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies...
வானில் உங்கள் நண்பன்...
யாழ் பயணத்தின் போது
ரோல்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை
அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 011 4512666 (3 Lines) Fax: 011 4514700
வெள்ளவத்தை - 011 2 360290, 2 360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com
இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பிறரிடம் ஏமாந்ததன் விளைவாக தானே வேலைவாய்ப்பு முகவரானவர்

## சாந்த ஜயசுந்தரவின் கிறீன்வே ஏஜென்ஸி இலங்கையில் இன்று மூன்றாவது பெரிய நிறுவனம்



ரீ.என்.எல். தொலைக்காட்சியில் அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் தொழில் அதிபர் சாந்த ஜயசுந்தரவைச் செவ்வி காண்கிறார்கள். வங்கி அதிகாரி, மொழிபெயர்ப்பாளர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

### வர்த்தக ஸ்பெஷல்

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் தொழில திபர் சாந்த ஜயசுந்தர கடந்த முதலாம் திகதி தோன்றித் தனது தொழில் முன் னேற்றம் பற்றி விவரித்தார்.

வெளிநாட்டில் வேலைவாய்ப் புப் பெற்றுக்கொடுக்கும் முயற்சி யல் பிறரிடம் ஏமாந்ததன் விளை வாகத் தானே வேலைவாய்ப்பு முகவர் நிலையம் ஆரம்பித்து முன்னேறியது பறற விவரித்தார் குருநாகல் 'கிறீன்வே ஏஜென்ஸி பிரை வேட் லிமிட்டட்' உரிமையாள ரான சாந்த ஜயசுந்தர.

ரீ.என்.எல. தொலைக்காட்சியில் அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம் பெனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் சாந்த ஜயசுந்தரவைச் செவ்வி கண்டனர். செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:* இலங்கையில் சிறந்த வெளிநாட்டு முகவராகத் திகழும் தாங் கள் இந்நிலையை எப்படி அடைந் தீர்கள்.

*பதில்:* எனக்கு இதுவொரு விபத்து என்றே கூறவேண்டும். 1987 ஆம் ஆண்டு எனது நண்பர்கள் சிலரை வெளிநாட்டுக்கு அனுப்பும் நோக்குடன் கொழும்புக்கு வந்தேன். கொழும்பில் இருந்த முகவர் ஒருவர் எனது நண்பர்களிடம் தலா 20ஆயிரம் ரூபா வீதம் முற்பணம் வாங்கியிருந் தார்.'

அதற்குப் பொறுப்பாளியாக நான் இருந்தேன். அந்த முகவர் சிறிது காலம் இழுத்தடித்துவிட்டு அவரது முகவர் நிலையத்தையும் மூடிவிட்டு, தலைமறைவாகிவிட்டார். என்னை நமபிக் காசு கொடுத்த எனது நண்பர் களுக்கு பின்னர் நான் எனது பணத்தைக் கொடுத்தேன். இந்த அனுபவம் என்னைப் பெரிதும் வருத் தியது. நான் எப்படியும் ஒரு சிறந்த முகவராக வேண்டும் என எண்ணி னேன். அதற்கான காலமும் கைகூடி யது. எனது நண்பர் ஒருவர் மூலம் சைப்பிரஸ் நாட்டில் உள்ள வேலை வாய்ப்பு முகவர்களின் தொடர்பு கிட்டியது. இந்தத் தொடர்பு கிட்டி யதால் பல ஆயிரக்கணக்கான பணிப் பெண்களை அந்த நாட்டுக்கு அனுப் பும் சந்தர்ப்பம் கிட்டியது. இன்று இலங்கையில் மூன்றாவது சிறந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவ ராக இருக்கிறேன். 2001ஆம் ஆண்டு சிறந்த முகவர்களுக்கான சிறப்பு விருதை பெற்றிருக்கிறேன்.

*கேள்வி:* உங்கள் வளர்ச்சி பற்றி விளக்குவீர்களா?

*பதில்:* நான் சாதாரண குடும்பத் தில் பிறந்தவன். சிறுவயதில் வீதி யில் செல்லும் கார்களை முன்னா லும் பின்னாலும் போய்ப் பார்ப்பேன். இது போன்ற ஒருகாரை நான் எப்படி யும் வாங்கவேண்டும். நான் பணக் காரனாக வேண்டும் என்று கற்பனை செய்வேன். குறிப்பிட்ட ஒருகாலத் தல் பணத்தின்மேல் அலாதிப் பிரி யம் ஏற்பட்டது. பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற வெறி என்னை ஆட்கொண்டது. ஒழுங்கான நித்தி ரையும், உணவும்இன்றி, நான் பணம் தேடுவதில் குறியாக இருந்தேன். இன்று, நான் கடந்தகால வாழ்க்கை யில் நினைத்தது எல்லாம் நிறைவா கவே உள்ளது. எனது வியாபாரத் தில் நான்நிறைவு கண்டிருக்கிறேன். திருப்தியடைந்திருக்கிறேன்.

*கேள்வி:* இந்த வியாபாரத்துறை பற்றி நாம் எதையும் அறிந்திருக்க வில்லை. நேருக்கு நேர் நிகழ்வில் முதன்முறையாக ஒரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரை பேட்டி காண்கிறோம். எனவே, இத்துறை பற்றி எமக்கு விளக்கமுடியுமா?

*பதில்:* நான் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆள்களை அனுப்புவ தில்லை. சைப்பிரஸ் நாட்டுக்கு மட் டுமே ஆள்களை அனுப்புகிறேன். சைப் பிரஸ் நாட்டில் தொழில் புரியும் இலங் கைப் பணிப்பெண்கள் எண்ணிக்கை யில் மூன்றாவது இடத்தை வகிக் கின்றனர். அங்கு இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளிலிருந்து சென்ற பணிப்பெண்களும் பணியாற்றுகின் றனர். அந்த நாட்டுக்குப் பணிப் பெண்களை அனுப்பும்போது சிறந்த பயிற்சியளித்து அனுப்பவேண்டும். அங்கு பணியாற்ற ஆங்கில மொழி கட்டாயம் தேவை. நான் எனது ஏஜென்சி மூலம் அனுப்பும் பெண் களுக்கு சிறந்த பயிற்சியளித்த பின் னரே அங்கு அனுப்புகிறேன். ஒரு நாட்டுக்கு அனுப்பும் முன்னர் அந்த நாட்டுக்கு ஏற்றவாறு பணிப்பெண் களுக்கு பயிற்சியளித்து அனுப்பும் போது எஜமானர்களால் அவர்க ளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தவிர்க் கப்படுகிறது. எனது ஏஜென்சி மூலம் அனுப்பும் பெண்கள் எந்த முறைப் பாடுகளும் இன்றி சிறப்பாகத் தொழில் புரிந்து விட்டு நாடு திரும்புகின்றனர். அந்த நாட்டுத்தொழில் தருநர்கள் எனக்கு நிறைய ஓடர்களைத் தரு கின்றனர். 2001ஆம் ஆண்டு கூடுத லான பணிப்பெண்கள சைப்பிரஸ் நாட் டுக்கு இலங்கையில் இருந்தே சென் றுள்ளனர். இதனால் எனக்குச் சிறந்த முகவர்க்கான விருது கிடைத்தது.

*கேள்வி:* நீங்கள் ஏன் ஆண்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதில்லை?

*பதில்:* இலங்கை ஆண்கள் தம் மைத் தொழில்சார் கல்வித்துறை யில் இணைத்துக் கொள்வதில்லை. ஏனைய நாடுகளில் இருந்து சைப் பிரஸ் நாட்டுக்குவரும் ஆண்கள் தொழில் ரீதியான சிறந்த பெறுபேறு களுடன் வருகின்றனர். இலங்கை ஆண்கள் எதற்கும் பொருத்தமற்ற வர்களாகவே உள்ளனர்.

எனவே, தொழில்சார் கல்வி பயிலுவதன் மூலம் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை இலகுவாகப்பெற முடியும். தொழில் ரீதியான தகைமை களுடன் செல்ல விரும்புபவாகளுக்கு எம்மால் உதவி செய்யமுடியும்.

*கேள்வி:* உங்களின் எதிர்காலத் திட்டம் என்ன?

*பதில்* சிறுவர் பாடசாலையொன்றை குருநாகலில் நிறுவவேணடும் என்பதா கும். இப்பகுதியில் சிறுவர்களுக்கான சிறந்த கல்விக்கூடங்கள் இல்லை

சர்வதேசத்தரத்துக்கு அமையப் பாடசாலை இப்பகுதியில் இல்லை. அத்துடன், நாட்டுக்குச் சிறந்தவர்களை யும, கலாசார விழுமியங்களை அறிந தவர்களாகவும் நாட்டுப் பற்றுடைய வர்களாகவும் சிந்திக்க வைக்கும் வகை யில் எனது சிறுவர் பாடசாலை அமை யும. சிறந்த பிரஜைகளை உருவாக்கு வதே அதன் திட்டமாகும் - இவ்வாறு கூறினார் அவர். ★

# தனித்துவம் மிக்க தனது கவிதைகளால் மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர் பண்டிதர் ச.வே.

## ஆசிரியர் ஆறு.திருமுருகன் புகழாரம்

வலி.தெற்கு,ஜூன்4

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தின் கவிதைகள் தனித்துவம் மிக்கவை. இவரது கவிதைகள் பெரும்பாலும் போராட்டம் சார்ந்தவையாக இருப் பினும் இன்று ஆத்மீகத்துடன் கூடிய கடவுளை மன்றாடுகின்ற பாணியில் அமைந்துவருவது மேலும் தனித்து வம் மிக்கதெனலாம்.

இணுவில் கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் நடைபெற்ற பண்டிதர் ச.வே.பவின் "இணுவை முருகன் பிள் ளைத்தமிழ்" கவிதை நூல் வெளி யீட்டு விழாவில் நூலை வெளியிட்டு உரையாற்றிய செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் மேற்கண்டவாறு கூறினார்.

இளைப்பாறிய அதிபர் செ.சோதிப் பெருமாள் தலைமையில் விழா நடை பெற்றது. ஆறு.திருமுருகன் தமது வெளியீட்டுரையில் மேலும் தெரிவித் ததாவது:-

கவிதைகள் மூலம் இணுவிலுக் கும், ஈழத்திற்கும் பெருமைதேடித் தந்தவர் வே.பஞ்சாட்சரம் இலக்கி யத்துடன் சமயத் தொண்டையும் ஊக்குவிக்கின்ற தன்மையை அவரது கவிதைகளில் காணலாம்.

இவரைப் போன்று ஆலயங்கள் தொடர்பாக வெளியிடப்படும் நூல் கள் யாவும் ஆலயங்களில் பாதுகாக் கப்படவேண்டும். இதற்காக ஒவ்வோர் ஆலயங்களிலும் நூல்நிலையங்கள் அமைக்கப்படவேண்டும்.

கலைமகள் ஆசிரியர் அமரர் சி.வ.ஜெகநாதன் நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் நூலகம் அமைத்துக் கந்தபுராணம் தொடர்பான சகல நூல் களையும் பாதுகாப்பாக வைத்து முன் மாதிரியாகத் திகழ்ந்துள்ளார். ஆராய்ச சியாளர்கள், பல்கலைக்கழக மாண வர்கள் போன்றோரின் தேவைகளுக்கு இவ்வாறு நூலகங்களில் நூல்களைப் பேணுவது ஆலய அறங்காவலர்களின் பெரும்பணியாகும் - எனக் கூறினார்.

நூலின் ஆய்வுரையை மேற் கொண்ட இராமநாதன் நுண்கலைப் பீடத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா கூறியதாவது:-

எமது கிராமத்துச் சிறப்புகளை நாம் அறிந்துகொள்வதில்லை. இணு விலுக்கு வருகைதந்த சுத்தானந்த பாரதியார் இணுவில் முருகன், கந்த சுவாமி கோயில் மஞ்சம், அக்காலத் தில் வாழ்ந்த வடிவேல் சுவாமிகள் போன்றோரைப் பார்த்துத் தாயகம் திரும்பி ஆலயச் சுற்றாடலில் தான் கண்டவற்றை வைத்துப் பாடல்கள் எழுதிச் சிறப்பித்துள்ளார்.

இணுவில் கிராமம், ஆலயம் அத னைச் சுற்றிய சூழல் என்பனவற் றைப் பின்னணியாக வைத்து இந்தப் பிள்ளைத் தமிழை சு.வே.ப. இயற்றி யுள்ளார்.

விடுதலை பற்றிப் பல பாடல்களை எழுதியவர் இன்று தெய்வீகப் பண்பு களை, தொண்டுகளை இலகு தமிழில பிள்ளைத் தமிழாகத் தந்துள்ளார்.

கவிதைகளை யாப்பு நிலை களுக்குட்பட்டும் யாப்பு நிலைகளை மீறியும் எழுதும் ஆற்றல் இவருக்கு உண்டு. வெளிநாட்டு நாகரிகங்கள் எமது பண்பாட்டு நிலைகளில் தாக் கத்தை ஏற்படுத்தி எமது பாரம்பரி யம், பண்பாடு என்பன அழியும் நிலை தோன்றிய இன்றைய காலத்தில் இது போன்ற நூல்கள் வெளிவருவது அவ சிய தேவையாகும் - எனக் கூறி னார். (10-152)

# வர்த்தகப் பிரமுகருக்கான விருது

2003ஆம் ஆண்டின் சிறந்த வர்த் தகப் பிரமுகரைத் தெரிவுசெய்வ தற்கான விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன. இதற்கான விண்ணப்ப இறு தித் திகதி அடுத்த மாதம் 31ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விருதுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இலங்கையில் தொடர்ச்சியாக 3வருடங்கள் தொழில் மேற்கொண்டிருக்க வேண்டும். அத்து டன் அவரது தொழிலகம் அரசில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

இவ்விருதுக்கான பிரிவுகள் விவ சாயம், தொழிற்சாலைகள், சேவை கள் என மூன்று வகைகளாக அமைந் துள்ளன. முதலீடு செய்யப்பட்ட தொகைக்கேற்பவும் நிறுவனங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

இவ்விருதை வர்த்தக சம்மேளனத் தினர் வழங்குகின்றனர். இவ்வைபவத் திற்கு 'பீபில்ஸ் லீசிங்' நிறுவனத்தி னர் பிரதான அனுசரணையாளராக வும், 'யூனியன் அஷ்ரன்ஸ்' நிறுவனத் தினர் இணை அனுசரணையாளரா கவும் செயற்படுகின்றனர்.

மேற்படி விருது தொடர்ந்தும் ஒன்பதாவதுவருடமாக வழங்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

# நித்திரையில் கட்டிலிலிருந்து தவறி வீழ்ந்து நோயாளி மரணம்!

## கண்டி ஆஸ்பத்திரியில் சம்பவம்

கண்டி,ஜூன்5

இருதய நோயாளியொருவர் கட்டி லிலிருந்து தவறி வீழ்ந்து உயிரி ழந்த சம்பவம் சமீபத்தில் கண்டி வைத்தியசாலையில் இடம்பெற்றுள் ளது. இன்னி அப்புஹாமி (வயது 68) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்த வராவார்.

இடநெருக்கடி காரணமாக ஒரே கட்டிலில் இவர் உட்பட 3 நோயாளி கள் தங்க அனுமதிக்கப்பட்டிருந் தனர் என்றும் -

இடவசதியின்மை காரணமாக இவர் தூக்கத்தில் தவறிக் கீழே வீழ்ந்து இறந்துள்ளார் என்றும் - தெரியவருகின்றது.

மேற்படி வைத்தியசாலையில் சம்பவதினம் இரவு 13ஆம் இலக்க வார்ட்டில் 92 நோயாளர்கள் அனுமதிக் கப்பட்டிருந்தனர். ஆனால், இங்கு 17 கட்டில்களே இருந்தன. இதனால் கட்டில் ஒன்றுக்குத் தலா 3 நோயா ளர்கள் வீதம் ஒதுக்கப்பட்டது. இந் நிலையில் ஒரு கட்டிலில் 3 நோயாளி கள் உறங்கினர். அப்போது தவறி வீழ்ந்தே மேற்படி நபர் உயிரிழந்தார்.

கட்டில்கள் பற்றாக்குறையால் நோயாளர்களும், வைத்தியசாலை ஊழியர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர் எனக் கண்டி வைத்தியசாலையின் பணிப் பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

# கொலையுடன் சம்பந்தப்பட்டோர் என விமானப் படையினர் 10பேர் கைது!

பண்டாரவளை,ஜூன்4

கொலைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத் தின் பேரில் விமானப்படையைச் சேர்ந்த 10பேர் உட்பட 13 நபர்கள் கடந்த திங்கட்கிழமை கைதுசெய் யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப பட்டுள்ளனர்.

பண்டாரவளையைச் சேர்ந்த பந் துல திசார (வயது 30) என்ற நப ரைக் கொலை செய்ததாகச் சந்தேகிக் கபபட்டே மேற்படி நபர்கள் கைதுசெய் யப்பட்டனர்.

திசாரவினுடைய சகோதரி, விமா னப்படையைச் சேர்ந்த ஒருவரை நீண்ட காலமாகக் காதலித்து வந்தார் என் றும் - 'ஆனால், அந்த நபர் வேறொரு பெண்ணைத் திருமணஞ்செய்து கொண்டார் என்றும் - கூறப்படுகிறது.

இதனால், கோபமடைந்த திசார, குறிப்பிட்ட விமானப் படைப்பணியாளர் அவரது மனைவியுடன் சென்றுகொண டிருந்த போது அவரைத் தாக்கினார்.

தாக்கப்பட்ட விமானப்படைப் பணி யாளர் தனது சக ஊழியர்கள் மற்றும் நண்பர்களுடன் பின்னர்சென்று திசார, அவரது தந்தை மற்றும் அவ ரது சகோதரி ஆகியோரைத் தாக் கினர்.

இத்தாக்குதலில் திசார இறந் தார். அவரது தந்தையும் சகோதரி யும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாகவே மேற் படி 13 பேரும் கைதுசெய்யப்பட்டுள் ளனர். (ஒ-ரி)

தலைசிறந்த வங்கி • 2004



குளோபல் ஃபினான்ஸ்

6 ஆவது தொடர்ச்சியான வருடமாக

# எமது வெற்றி தொடர்கிறது...

## தொடர்ந்து ஆறு வருடம்!

கொமர்ஷல் வங்கி தொடர்ந்து ஆறுவருடங்களாக குளோபல் ஃபினான்ஸின் "தலைசிறந்த வங்கி" என்ற விருதினை வென்று சாதனை நிலைநாட்டியுள்ளது. நாம் இந்த வெற்றிப் பெருமிதத்தை எங்கள் அபிமான வாடிக்கையாளர்களான உங்களுடன் மனப்பூர்வமாகப் பகிர்ந்துகொள்கிறோம். ஆண்டாண்டு காலமாக நீங்கள் காட்டிவரும் ஆதரவே எங்கள் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கின்றது. நீங்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை எதிர்காலத்திலும் எங்களுக்கு உந்துசக்தியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இலங்கையின் தலைசிறந்த வங்கியாக முன்னணி வகிக்கும் நாம், உங்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

2004
BEST BANK IN SRI LANKA
6TH CONSECUTIVE YEAR
Rated by GLOBAL FINANCE

கொமர்ஷல் வங்கி

உங்கள் நலமே எங்கள் நோக்கம்

Q&E Advertising

# மேற்கிந்தியக் கிரிக்கெட் அணியின் வெற்றிக் கனவுக்கு முட்டுக்கட்டை


பங்களாதேஷ் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. பங்களாதேஷ் விக்கெட் காப்பாளர் காலத்மித் சதம் அடித்தார்.

பங்களாதேஷ் அணி தற்போது மேற்கிந்தியத்தீவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறது. இந்த இரு அணிகளுக்கும் இடையே முதல் டெஸ்ட் மே29இல் தொடங்கியது. முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி தனது முதல் இன்னிங்ஸில் 416ஓட்டங்கள் குவித்தது. அடுத்து களமிறங்கிய மே.இந்தியா 352 ஓட்டங்கள் எடுத்தது. 64 ஓட்டங்கள் முன்னிலை பெற்று இரண்டாம் இன்னிங்ஸைத் தொடங்கி பங்களாதேஷ் நான்காம் நாள் ஆட்ட முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 94 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ரஜின் சலே 34, காலத்மித் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

ஐந்தாம் நாள் ஆட்டத்தின்போது தொடர்ந்து ஆடிய பங்காளதேஷ் அணியின் ரஜின் சலே அரைச்சதம் அடித்த நிலையில் எட்வர்ட்ஸ் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் மித் - ரபீக் ஜோடி சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேகரித்தது. இந்த ஜோடி எட்டாவது விக்கெட்டுக்கு 56ஓட்டங்கள் குவித்தது. ரபீக் 29 ஓட்டங்களில் சர்வானிடம் வீழ்ந்தார். மித் தனது அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றி தோல்வியின்றி முடிக்கும் முயற்சியில் இறங்கினார்.

இவருக்குப் பக்கபலமாகச் செயற்பட்டார் பைஸ்யா. இந்த ஜோடி ஒன்பதாவது விக்கெட்டுக்கு 74 ஓட்டங்களைச் சேர்த்தது. பைஸ்யா 26ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர் ஆட்டமிழந்ததும் நிதானமாகவும் நேர்த்தியாகவும் ஆடிய மித் டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது முதல் சதத்தை எட்டினார். இவர் சதமடித்ததும் ஆட்டத்தை நிறுத்தினார் அணித்தலைவர் பஷார். அப்போது பங்களாதேஷ் 9 விக்கெட் இழப்புக்கு 271ஓட்டங்கள் எடுத்திருந்தது. மித் (103) தாரிக் அஜீஸ் (1) களத்தில் இருந்தனர்.

29 ஓவர்களில் 336ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது மேற்கிந்திய அணி. 23 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 113 ஓட்டங்கள் எடுத்த நிலையில் இரு அணித்தலைவர்களும் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தனர். முதல் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. 66 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்த ஹெய்ல் ஆட்டநாயகனாக அறிவிககப்பட்டார்.



சதமடித்த காலத்மித்

# ஒலிம்பிக்கில் தங்கம் வெல்ல இந்திய ஹொக்கி அணி முயற்சி

ஒலிம்பிக் போட்டிக்கான சிறப்புப் பயிற்சி முகாமில் பங்கேற்க இந்திய ஹொக்கி வீரர்கள் நேற்றுமுன்தினம் அதிகாலை அமெரிக்கா புறப்பட்டுச் சென்றனர்.

கிரீஸ் தலைநகர் ஏதென்ஸில் ஓகஸ்ட் 13இல் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகின்றன. ஹொக்கிப் போட்டியில் எட்டு முறை தங்கம் வென்றுள்ள இந்திய அணி 1980 இற்குப் பிறகு இந்த வாய்ப்பைத் தவறவிட்டது. இந்த அணி கடந்த 20ஆண்டுகளாக ஒலிம்பிக் ஹொக்கியில் தங்கம் வெல்லவில்லை. இதனால் இம்முறை இந்திய வீரர்களுக்கு அதிக பயிற்சி அளிக்க இந்திய ஹொக்கி சம்மேளனம் முடிவுசெய்தது.

இதற்காக அமெரிக்கா, ஹொலண்ட், ஜேர்மனி ஆகிய நாடுகளில் சிறப்புப் பயிற்சி முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும் நான்கு நாடுகள் பங்கேற்கும் இரண்டு ஹொக்கித் தொடர்களில் இந்திய அணி பங்கேற்கிறது. முதலில் 21நாள் பயிற்சி முகாம் ஒன்று அமெரிக்காவில் உள்ள அரிசோனாவில் நடக்கவுள்ளது. இந்தப் பயிற்சி முகாமில் பங்கேற்க 26 வீரர்கள் கொண்ட இந்திய உத்தேச அணி அமெரிக்கா புறப்பட்டுச் சென்றது.

டில்லி விமான நிலையத்தில் இந்திய அணியின் அனுபவ வீரரான தன்ராஜ்பிள்ளை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இன்றிலிருந்து எங்கள் முழுக் கவனமும் ஒலிம்பிக் போட்டியைப் பற்றித்தான் இருக்கும். போட்டியில் எப்படி விளையாட வேண்டும் என்பது பற்றி மட்டுமே நாங்கள் சிந்தித்துக் கொண்டுள்ளோம். ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்வதே எங்கள் அனைவரின் இலக்காகும். அதற்குப் பயிற்சி முகாம்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும் இரண்டு தொடர்களில் நாங்கள் பங்கேற்க உள்ளோம். இந்தத் தொடர்கள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை. பயிற்சி முகாமில் நாங்கள் கற்றுக்கொண்டதை இந்தத் தொடர்களில் பயன்படுத்திக்கொள்வோம் என்று கூறினார். (ஒ)

# தெ. ஆபிரிக்க கிரிக்கெட் வீரர்கள் இந்தியா வருவதற்குத் தயக்கம்

## பொலீஸ் விசாரணை காரணமாம்

டேர்பன்,ஜூன்4

இந்தியச் சுற்றுப் பயணத்தில் தென்ஆபிரிக்க கிரிக்கெட் அணியில் கிப்ஸ், நிக்கி போஜே ஆகியோர் இடம்பெறமாட்டார்கள் என அந்நாட்டு கிரிக்கெட் நிர்வாகத் தலைவர் ரே மாலி அறிவித்துள்ளார்.

கடந்த 2000ஆம் ஆண்டு ஹான்ஸி குரோன்ஜே தலைமையிலான தென் ஆபிரிக்கக் கிரிக்கெட் அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இதில் தென் ஆபிரிக்க வீரர்கள் குரோன்ஜே, கிப்ஸ், நிக்கி போஜே ஆகியோர் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்று டில்லி பொலீஸார் ஆதாரத்துடன் கண்டுபிடித்தனர். இதனால் குரோன்ஜே அணியில் இருந்து நீக்கப்பட்டார். இவர், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடந்த விமான விபத்தில் மரணமடைந்தார். இருப்பினும், கிரிக்கெட் சூதாட்டப் பிரச்சினை முடியவில்லை. விசாரணைக்காக கிப்ஸ், போஜே இருவரையும் டில்லி பொலீஸார் அழைத்தனர். ஆனால், இவர்கள் டில்லி பொலீஸார் பல முறை அழைத்தும் ஆஜராகவில்லை. இந்நிலையில், தென்ஆபிரிக்க கிரிக்கெட் அணி மீண்டும் வரும் ஒக்ரோபரில் இந்திய சுற்றுப்பயணம் மேற்கொள்கிறது. இந்தத் தொடரின்போது தங்கள் வீரர்கள் மீது பொலீஸ் நடவடிக்கை எடுக்கக்கூடாது எனத் தென்ஆபிரிக்க கிரிக்கெட் நிர்வாகம் இந்தியக் கிரிக்கெட் சபையிடம் வேண்டுகோள் விடுத்தது.

இதைப்பற்றி இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா கூறுகையில்:-

இந்திய கிரிக்கெட் சபை பொலீஸ் விசாரணைகளில் தலையிடாது. ஆனால், இங்கு வரும் தென் ஆபிரிக்க வீரர்கள் எவ்விதத்திலும் விசாரிக்கப்படமாட்டார்கள் என தென் ஆபிரிக்க நிர்வாகத்திற்கு உறுதியளிக்கின்றோம் - என்று கூறினார்.

இருப்பினும், கிப்ஸ், போஜே இருவரையும் இந்திய சுற்றுப் பயணத்திற்கான தென்ஆபிரிக்க அணியில் சேர்க்க அந்நாட்டு கிரிக்கெட் நிர்வாகம் தயங்குகிறது.

தென்ஆபிரிக்க கிரிக்கெட் நிர்வாகத் தலைவர் ரே மாலி அந்நாட்டு வானொலிக்கு அளித்த பேட்டியில், எங்கள் வீரர்கள் கிரிக்கெட் விளையாடுவதற்கு மட்டுமே இந்தியா செல்கின்றனர். அவர்கள் மீது டில்லிப் பொலீஸார் விசாரணை நடத்துவார்கள் என்றால், கிப்ஸ், போஜே இருவரும் இந்திய தொடரருக்கான தென்ஆபிரிக்க அணியில் இடம்பெறமாட்டார்கள் - என்று கூறியுள்ளார். (ஒ)

# லஞ்சம் கொடுத்து அணியில் சேர எத்தனம்; கிரிக்கெட் வீரர் அபிஜித்துக்குத் தடை!

கொல்கத்தா,

லஞ்சம் கொடுத்து கிரிக்கெட் அணியில் சேர முயன்ற விவகாரத்தில் இந்தியக் கிரிக்கெட் வீரர் அபிஜித் காலேவுக்கு டிசெம்பர் 31வரை விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிர கிரிக்கெட் வீரர் அபிஜித் காலே சிறந்த துடுப்பாட்டவீரராவார். கடந்த ஆண்டு ஆஸ்திரேலிய சுற்றுப்பயணம் சென்ற இந்திய அணியில் இடம்பிடிக்க, தேர்வுக்குழு உறுப்பினர்களுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றார் என சர்ச்சை கிளம்பியது. அணியில் இடமளித்தால், ஆளுக்கு இந்தியப் பணத்தில் 10 லட்சம் ரூபா லஞ்சம் தர முன்வந்தார் என்று காலே மீது தேர்வுக்குழு உறுப்பினர்கள் கிரண்மோரே, பிரணாப் ராய் ஆகியோர் குற்றம் சாட்டினர்.

இந்திய கிரிக்கெட்டில் இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த வழக்கு முடியும் வரை கடந்த நவம்பர் முதல் கிரிக்கெட் போட்டி



களில் பங்கேற்க காலேவுக்கு இந்திய கிரிக்கெட் சபை தடை விதித்தது. காலேவை விசாரிப்பதற்காக கிரிக்கெட் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா, துணைத் தலைவர்கள் கமால் மொரார்க்கா, ரன்பீர் சிங் மகேந்திரா ஆகியோர் அடங்கிய ஒழுங்கு நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டது. விசாரணை பல கட்டங்களாக நடந்தது.

கடந்த மாதம் 15ஆம் திகதி விசாரணை முடிந்தது. குற்றஞ்சாட்டிய கிரண்மோரே, பிரணாப் ராய் குற்றஞ்சாட்டப்பட்ட காலே ஆகியோர் பலமுறை விசாரிக்கப்பட்டனர். கடந்த 15ஆம் திகதி நடந்த ரகசிய விசாரணையில். காலே குற்றத்தை ஒத்துக்கொண்டார் எனத் தெரிகிறது. இந்திய அணியில் இடம்பிடிப்பதற்காக தேர்வுக்குழு உறுப்பினர்களை சந்தித்து வற்புறுத்தியது உண்மைதான். ஆனால், லஞ்சம் எதுவும் கொடுக்க முன்வரவில்லை. ஆகவே, எனக்கு குறைந்த பட்ச தண்டனை அளிக்க வேண்டுகிறேன். காரணம் என்னை நம்பித்தான் எனது குடும்பமே இருக்கிறது" என்று பகிரங்க மன்னிப்புக் கேட்டாராம் காலே. மன்னிப்புக் கடிதமும் அளித்தாராம்.

இதனையடுத்து எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளிலும் பங்கேற்க அவருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# பிரெஞ் பகிரங்க டெனிஸ்

பரிஸ்,ஜூன்4

பிரெஞ் பகிரங்க டெனிஸ் போட்டியில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றவர்கள் விவரம் வருமாறு:-

**பெண்கள் ஒற்றையர்**

அமெரிக்காவின் ஜெனிபர் கேப்ரியாட்டி: 6-3,2-6,6-3 என்ற கணக்கில் சக நாட்டு வீராங்கனையான செரினா வில்லியம்ஸை வீழ்த்தினார்.

ரஷ்யாவின் அனஸ்டசியா மிஸ்கினா : 6-3, 6-4 என்ற கணக்கில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸைத் தோற்கடித்தார்.

ரஷ்யாவின் எலினா டெமன்டிவா 6-4, 6-3 என்ற கணக்கில் பிரான்ஸின் அமெலி மவுரீஸ்மோவை எளிதாக வீழ்த்தினார்.

ஆர்ஜென்ரீனாவின் பாலோ ரிரஸ் ரஷ்யாவின் ஷ்ரபோவாவை 6-1, 6-3 என்ற கணக்கில் வீழ்த்தினார்.

**ஆண்கள் ஒற்றையர்**

பிரிட்டனின் டிம் ஹேறன்மேன் : 6-2, 6-4, 6-4 என்ற நேர் செட்களில் ஆர்ஜென்ரீனாவின் இக்னசியோ சேலாவைத் தோற்கடித்தார்.

கில்லர் மோ கோரியா: ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த இவர் 7-5, 7-6, 6-3 என்ற கணக்கில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் மோயாவைத் தோற்கடித்தார்.

ஆர்ஜென்ரீனாவின் கஸ்டன் காடியா: 6-3, 6-2, 6-2 என்ற கணக்கில் ஆஸ்திரேலியாவின் லெடன் ஹேறவிட்டைத் தோற்கடித்தார்.

ஆர்ஜென்ரீனாவின் டேவிட் நல்பாந்தியன், பிரேஸிலின் குஸ்தவோ குயர்டனை 6-2, 3-6, 6-4, 7-6 என்ற நேர் செட்களில் தோற்கடித்தார்.

இந்த வெற்றிகளின் மூலம் பெண்கள் பிரிவில் கேப்ரியாட்டி, மிஸ்கினா, டெமன்டிவா, பாலோ, ரஸ் ஆகியோரும் ஆண்கள் பிரிவில் ஹென்மேன், கோரியா, காடியோ, நல்பாந்தியன் ஆகியோரும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளனர். (ஒ)

# விளையாட்டு

# ஒலிம்பிக் சுடர் சிட்னி வருகை

சிட்னி,ஜூன்4

உலகம் முழுவதும் பயணித்துள்ள ஏதேன்ஸ் ஒலிம்பிக் சுடர் இன்று ஆஸ்திரேலியாவில் உள்ள முக்கிய இடங்கள் வழியாக கிரேக்கம் கொண்டு செல்லப்படவுள்ளது.

400 மீற்றர் ஓட்டப்பந்தயச் சம்பியன் காத்தி ஃபிரிமென் உட்பட ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த முன்னிலை வீர, வீராங்கனைகள் இந்த ஓட்டத்தில் பங்கேற்கின்றனர்.

இதேவேளை 1956இல் மெல்போர்னில் போட்டி நடைபெற்றபோது சுடரை ஏற்றிய ரான் கிளார்க் ஓட்டத்தைப் புறக்கணித்துள்ளார்.

சிட்னி, மெல்போர்ன்ஆகிய இரு பெரிய நகரங்களுக்கும் ஊடாக சுடர் செல்லும் பாதை இருந்திருக்கவேண்டும். அவ்வாறு இல்லாததால் ஓட்டத்தில் பங்கேற்கவில்லை' எனக் காரணம் கூறியுள்ளார் கிளார்க்.

தற்போது வடக்கு குயின்ஸ்லாந்து மாகாணத்தில் உள்ள கோல்டு கோஸ்டின் நகர பிதாவாக உள்ளார் அவர்.

சிட்னிஒபாரா ஹவுசிலிருந்த சுடரை ஏந்தி ஓட்டத்தைத் தொடங்கி வைக்கிறார் காத்தி ஃபிரிமென். சிட்னியில் கடந்த முறை போட்டி நடைபெற்றபோது இவரே சுடரை ஏற்றி வைத்தார். போட்டிகளில் பங்கேற்பதிலிருந்து ஃபிரிமென் ஓய்வுபெற்றுவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



பொதுநலவாய குத்துச் சண்டைப் போட்டியில் தற்போதைய சம்பியன் பிரிட்டனின் கார்ல் புறொக் வெற்றிபெற்று பட்டத்தைத் தக்கவைத்துக் கொண்டார். மார்க் வூல்நொப்புடன் கார்ல் புறொக் (வலது) மோதிய காட்சி இது.

நாளை....
அறவழி வெள்ளி விழா
கைதடி நுணாவிலில்
அறவழிப் போராட்டக்குழு
(32708)(42-)

குத்தகைக்கு பேக்கரி

நெல்லியடியில் திருமகள் சோதி வீதியில் 'திருமால் பேக் ஹவுஸ்' குத்தகை அடிப்படையில் கொடுக்கப்படவுள்ளது. விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

நெல்லை சில்க்
திருமகள் கட்டடம்
நெல்லியடி.
(C/35393) T.P No. 021-2263207 (40-21-14)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கார்த்திகேசு தம்பு செல்லத்துரை**
(சடாசிவம், போமன்)
(இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர்,
அரசாங்க சிறு கைத்தொழில்
கூட்டுத்தாபனம், கொழும்பு)
திதி: 04-06-2004

மண்ணுலக இணைப்பு: 21-06-1917
விண்ணுலக அழைப்பு: 08-06-2001

எம் அன்புத் தெய்வம் ஐயா
மூன்றாண்டுகள் கழிந்தாலும் ஆறாது உங்கள் துயர்!

என்றும் நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
(32706) (21-14-12)

## வதிவிடப் பயிற்சி

வலி.தெற்கு,ஜூன்4

வலிகாமம் வலயக் கல்விப் பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யபபட்ட 50 ஆசிரியர்களுக்கு இம்மாதம நடுப் பகுதியில் ஒருவாரகால வதிவிட்த் தொடர் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன என்று வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராசா தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத தின் அனுசரணையுடன் இந்த ஆசிரியா களுக்கு எட்டு நாள்கள் தொடர் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

(ஒ-152)

## உடுவில் பிரதேச ஓய்வூதியர்களுக்கு!

வலி.தெற்கு,ஜூன்4

உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 1996ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தின் முன் ஓய்வுபெற்ற ஓய்வூதியர்களின் ஓய்வூதியங்கள் திருத்தியமைக்கப்பட உள்ளமையால் இத்திகதிக்கு முன் ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிர்வாக சேவை தரத்தினைச் சேர்ந்தவர்கள் மட்டும் பிரதேச செயலகத்தில் வழங்கப்படும் படிவங்களைப் பூர்த்திசெய்துகொள்வதற்காக ஓய்வூதியக் கிளைக்கு வருகை தருமாறு பிரதேச செயலகக் கணக்காளர் அறிவித்துள்ளார்.

(10-152)

## தென்னிலங்கை மற்றும் கிழக்கு மாகாண எழுத்தாளர்கள் வருகை

யாழ்ப்பாணம்,ஜூன்4

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ள இலக்கியப் பேரவையின் விழாவிற்குத தென்னிலங்கை மற்றும் கிழக்கு மாகாண எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோரும் வருகை தரவுள்ளனர்.

எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் அனைவரையும் அன்றைய தினம் காலை 10 மணிக்கு விழா மண்டபத்துக்கு வருகை தருமாறு இலக்கியப் பேரவை கேட்டுள்ளது.

(10-ரி)

ஒருகோடி ரூபா போதைப் பொருளுடன்

# இலங்கையர் உட்பட 5 பேர் தமிழகத்தில் கைதாகினர்

திண்டுக்கல்,ஜூன்4

போதைப் பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட இலங்கையர் ஒருவர் உட்பட 5பேர் தமிழகத்தில் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ஒருகோடி ரூபா மதிப்புள்ள ஹெரோயின் போதைப் பொருள் தடுப்புப் பொலீஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

பொலீஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து திண்டுக்கல் மதுரை வீதியில் சோதனை நடத்தப்பட்டது. அவ்வேளை பஸ்தரிப்பிடம ஒன்றில் சந்தேகத்துக்கிடமான வகையில் நின்றுகொண்டிருந்த 5 பேரைப் பொலீஸார் விசாரித்தனர். அப்போது அவர்கள் ஹெரோயின் கடத்த முயன்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்கொண்டு பொலீஸார் நடத்திய சோதனையில் ஒரு கிலோ எடையுள்ள ஹெரோயின் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அதன் மதிப்பு சுமார் ஒருகோடி ரூபாயென மதிப்பிடப்பட்டுள்ளது.

ராஜஸ்தானிலிருந்து ஹெரோயினைக் கடத்திக்கொண்டு பஸ்மூலம் திண்டுக்கல்லுக்கு வந்த அந்த நபர்கள் அங்கிருந்து இராமேஸ்வரம் வழியாக இலங்கைக்குள் அதனைக் கடத்திச் செல்ல இருந்தனர். இதற்காக இராமேஸ்வரம் செல்லும் பஸ்ஸுக்காகக் காத்திருந்த வேளையே பொலஸாரிடம் அவர்கள் சிக்கினர்.

(ஒ-ரி)

## கலந்துரையாடல் பிற்போடல்

வலி.தெற்கு,ஜூன்4

சுன்னாகம் தபாற்கந்தோர் எதிர்காலத்தில் அமைய உள்ள இடம் பற்றி நாளை சனிக்கிழமை முற்பகல்11 மணிக்கு சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலய மண்டபத்தில் நடைபெற இருந்த கலந்துரையாடல் பிற் போடப்பட்டுள்ளதாகத் தபாலதிபர் அறிவித்துள்ளார்

(10-152)

D.C.M பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

1 st in Com.
G.A.Q.
2005 கல்வியாண்டு
மேற்படி கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
★ A/L பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணபபிக்கமுடியும்.
விரிவுரைகள் ஆரம்பம்: 05.06.2004 சனி 9.00 மணி (ப.நே.)

S.வரதராஜன்
இயக்குநர்,
வணிக, முகாமைத்துவ பட்டப்படிப்புக் கல்லூரி.
(32683) (34-13-17-37)

COMPUTER DIPLOMAS



- Diploma in Language Programming
- Diploma in Hardware
- Diploma in Computer Accounting
- Diploma in Computer Draghting
- Diploma in Desktop Publishing
- Diploma in MS Office
- Diploma in Auto CAD

Batch I : 05/06/2004
Batch II : 07/06/2004
Batch III: 12/06/2004

தகுதிபெற்ற பட்டதாரி விரிவுரையாளர்களின் விரிவுரையில் தகுதியான எதிர்காலம் நோக்கி
T.V.E.C.

STP Your Partner in IT solution
73, Palaly Road, Kantharmadam, T.P:021-222-2674

## பாரம்பரிய கலைநிகழ்வுகளைக் கொண்ட மாபெரும் ஊர்வலத்திற்கான நிகழ்ச்சி கோரல்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி எதிர்வரும் ஜூலை 16,17, 18ஆம் திகதிகளில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் மூன்று நாள்கள் கலைவிழாவுடன், நிறைவுநாளில் (18ஆம் திகதி) தமிழர்களின் கலை விழுமியங்களை வெளிப்படுத்தும் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகளைக் கொண்ட எழுச்சி ஊர்வலம் ஒன்றையும் நடத்த முடிவு செய்துள்ளோம். எனவே, இவ்ஊர்வலத்தில் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெறுவதை நாம் விரும்புகின்றோம்.

**1.புராதன கிராமிய ஆட்டம்/நடனம்.**

* சுளகு கிராமிய நடனம்
* கூடை கிராமிய நடனம்
* வாள் கிராமிய நடனம்
* பாம்பாட்டம்
* பேய் ஆட்டம்
* மான் ஆட்டம்
* கோலாட்டம்
* செம்புகரகாட்டம்
* அம்பாநடனம்
* தேவராட்டம்.
* செம்புகிராமிய நடனம்
* அரிவாள் கிராமிய நடனம்
* பெட்டி/கடகம் கிராமிய நடனம்
* குதிரையாட்டம்
* வேடராட்டம்
* ஓயிலாட்டம்
* கும்மி
* சிலம்படி ஆட்டம்
* முகமூடி ஆட்டம்
* கொத்து கிராமிய நடனம்
* கத்தி கிராமிய நடனம்
* மயிலாட்டம்
* வேதாள ஆட்டம்
* குரங்கு ஆட்டம்
* வசந்தன் கோலாட்டம்
* கட்டுக் கரகாட்டம்
* குடமுதல் கும்மி
* பொம்மல் ஆட்டம்

**2. காவடி**

* தாளக்காவடி
* பறைமேளத்துடனான காவடிகள்
* தவில் நாதஸ்வரத்துடனான காவடிகள்

**3.வாத்தியக்குழு**

* கீழைத்தேச வாத்திய இசைக்குழு ஊர்வலம்
* உடுக்குப்பல சேர்ந்த ஊர்வலம்
* தவில் நாதஸ்வர கச்சேரி ஊர்வலம்

*(வேறு வகைப் பாரம்பரியக் கிராமியக் கலை நிகழ்வுகளை ஊர்வலத்தில் சேர்த்துக்கொள்ள விரும்புவோர் அனுமதி பெற்று பங்குகொள்ளமுடியும்)*

**ஊர்வலத்தில் இடம்பெறும் பத்து சிறந்த நிகழ்வுகள் தெரிவுசெய்யப்பட்டு தரமான பரிசுகள் வழங்கப்படும்.**

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் பல்கலைக்கழகம், பாடசாலைகள், கலாமன்றங்கள், கலைஞர் குழுவினர், தனிநபர் குழுக்கள் போன்ற அமைப்புக்களைப் பங்குகொண்டு சிறப்பிக்க முன்வருமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம். பங்குகொள்பவர்களுக்கு ஏற்படும் செலவில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும். பங்குகொள்ள விருப்பமானவர்கள் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு 20-06-2004இற்கு முன் தொடர்புகொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

ஊர்வலம் நல்லூர் சட்டநாதர் கோவிலிலிருந்து பருத்தித்துறை வீதிவழியாக நல்லூர் துர்க்கா மணிமண்டபம் வரை இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**கலாபூசணம் செ.மெற்றாஸ்மயில், 077-6095070**
செயலாளர், பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக்கழகம்,
21, முதலாவது ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
(32701)(42)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கபிரியேல் அருளப்பு**

மண்ணுலகில் 30.05.1926
விண்ணுலகில் 04.06.2003

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே
என்றும் ஒளிர்ந்த எம் பாசத்தந்தையே - எம்
ஒளி அணைந்து ஓராண்டு ஆகியதே
ஒரு நொடிப்பொழுது போல்
வேகமாகக் காலம் சென்றாலும் - எம்
வேதனை தான் குறையுமா?
நீங்கள் இல்லா நாள்கள் எண்ணி
நித்தமும் நாம் கலங்குகின்றோம்
எந்நாளும் உங்கள் உருவம்
எம் கண்முன்னே தோன்றுதையா
நடந்தவை யாவும் கனவானால்
நன்றி கோடி இறைவனுக்கே
உடலுக்கு உயிர் தந்து
உறவுக்குப் பாசம் வைத்து
மண்ணுலகில் எம்மைப் படைத்த தேவன்
மரணத்தையும் தந்தானே
மறுபிறப்பு என்றொன்றிருந்தால்
மறுபடியும் நாம் இணைந்து
இனிதாக வாழ்ந்திடவே
இறையருள் வேண்டுகிறோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக எந்நாளும்
பிரார்த்திக்கும்:
**அன்பு மனைவி, பிள்ளைகள்.**

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(32710) (24-14-12-21)